விலை : 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 18 வெள்ளிக்கிழமை (03.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227


# இனப்பிரச்சினைக்கான தீர்வு

# 2020 ஆம் ஆண்டுக்குள் வந்துவிடும்

## யாழில் நம்பிக்கை வெளியிட்டார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நீண்டகாலமாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கு 2020 ஆம் ஆண்டிற்குள் தீர்வு காணமுடியும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க யாழ்ப்பாணத்தில் நம்பிக்கை வெளியிட்டார். (23ஆம் பக்கம் பார்க்க)



## யாழில் விசேட சுற்றிவளைப்பு

### 11 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்று வரும் வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் 23

## 130 கிலோ கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் பிரதேசத்தில் 130 கிலோ கேரள கஞ்சா தொகையுடன் சந்தேகநபரொருவர் பொலிஸ் சிறப்பு அதிரடிப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கேரள கஞ்சா தொகை வேறொரு இடத்திற்கு கொண்டு செல்ல வைக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு கைப்பற்றப் 23

## குழை பறிக்கும்போது மேலிருந்து கீழே விழுந்தவர் பலி

(யாழ்ப்பாணம்)

ஏணியில் ஏறி குழை பறிக்க முற்பட்ட முதியவர் கால் தடுக்கி கீழே விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மாதகல் விபுலானந்த வீதியை சேர்ந்த செல்லையா 23

## வடக்கில் கடன்களை வசூலிக்க ஆவா குழு பயன்படுகின்றது

### அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் குறிப்பாக வடக்கில், நிதி நிறுவனங்களிடம் நுண் கடன்களை பெற்றுக்கொள்ளும் பெண்களை அச்சுறுத்தி, வட்டி மற்றும் கடன்களை பெற்றுக்கொள்ளும் பணிகளில் ஆவா 23

## வடக்கில் விகாரை கட்டுவதால் தமிழர் அச்சம் கொள்ள வேண்டாம்

### யாழில் உப திஸ்ஸ தேரர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

புத்தரும் விஷ்ணுவின் அவதாரம்தான். எனவே வடக்கில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதால் தமிழர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என பணகல உப திஸ்ஸ 23

## வட்டுக்கோட்டையில் குள்ள மனிதர்கள் நேற்றும் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை முதலி கோவிலடியில் உள்ள வீடுகளில் உள்ளவர்களை குள்ள மனிதர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 7.00 மணியளவில் இடம் 23

## அரசுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிரணி கொழும்பில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

நாட்டை அழிக்கும், காட்டிக்கொடுக்கும் திறமையற்ற துரோகத்தமான அரசாங்கத்தை வெளி 23

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

### மகிந்த அணி எச்சரிக்கை

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் தொடர்ந்தும் காலம் தாழ்த்திவருகின்றமை தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக ஒன்றிணைந்த எதிரணி எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த ஒன்றி 23

## மாகாணசபைத் தேர்தலை கலப்பு முறையில் நடத்துக

### பப்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரியில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதானால், கடந்த பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி தேர்தல்களின் போது கடைப்பிடிக்கப்பட்ட கலப்பு தேர்தல் முறையிலேயே தேர்தலை நடத்த வேண்டும் என சுதந்திரமான 23

## கட்சி பதவியிலிருந்து நீக்கியும் எவ்வாறு எதிர்க்கட்சியில் இருக்கின்றீரோ

## அவ்வாறே வடக்கு வன்முறையை கட்டுப்படுத்துவேன்

### தவராசாவுக்கு முதல்வர் விக்னேஸ்வரன் பதிலடி





(யாழ்ப்பாணம்)

கட்சி எதிர்க்கட்சிப் பதவியிலிருந்து உங்களை நீக்கியும் எவ்வாறு நீங்கள் தொடர்ந்து அப்பதவியில் இருக்கின்றீரோ அதேபோல வடக்கு வன்முறையை 23

## அரசியலில் சுயாட்சி தந்து எம்மை நாமே ஆள விடுங்கள்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசியலில் சுயாட்சியை தந்து எம்மை நாமே ஆளவிடுங்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலக இலங்கை முயற்சியாண் 04

**நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு**

**நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய**

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

**கிளினிக் நடைபெறும் திகதி:**
**யாழ்ப்பாணத்தில்-04/08/2018 (நாளைய தினம்)**
**பரந்தனில்-11/08/2018**

**I.A.S. HOSPITAL**
**ஐ.ஏ.எஸ் மருத்துவமனை**

ஒமெகா இன்,
இல.101, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
(2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்)

பல நோக்கு கூட்டுறவு
சங்க கட்டடம்,
பரந்தன் சந்தி,
பரந்தன்

தொடர்புகட்கு:-
**077 440 5969, 077 444 1082**
(சி-3421)

## பழைய புத்தகங்களை கொள்வனவு செய்யும் நிறுவனங்களை பதிவு செய்தல்
## வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்

பாடசாலையில் பயன்படுத்தி பாவிக்க முடியாத நிலையிலுள்ள புத்தகங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்பும் நிறுவனங்கள் உரிய விண்ணப்பப் படிவத்தினை யாழ்.வலயக் கல்வி அலுவலக நிதிக் கிளையில் அலுவலக நேரத்தில் பெற்று பூரணப்படுத்தி 17.08.2018-ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சு.சுந்தரசிவம்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**
(சி-3414)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதியள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-3393)

## வடக்கில் விகாரை...

தேரர் தெரிவித்துள்ளார்.

மதவேற்றுமைகளை களைந்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்க்கும் நோக்கில் மகாபோதி சங்கத்தின் தலைவர் பணகல உபதிஸ்ஸ தேரர் நேற்று யாழிற்கு வருகை தந்தார்.

இந்து மத தலைவர்களையும், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் சந்தித்து கலந்துரையாடினார்

நேற்று காலை யாழ் வந்த அவர் மாலை 3.30 மணிக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் சின்மய மிசன் சுவாமிகள் ஆகியோரை சந்தித்து மத வேற்றுமைகளை களைவதன் ஊடாக இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்ப்பது தொடர்பில் பேசியுள்ளதுடன், விரைவில் இந்து மத தலைவர்களையும், பௌத்த மத தலைவர்களையும் ஒன்றிணைத்து கலந்துரையாடல் ஒன்றை நடத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தொடர்ந்து மாலை 4 மணிக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்த பணகல உபதிஸ்ஸ தேரர் யாழ்.மாவட்டத்திலும், குறிப்பாக வடமாகாணத்திலும் மக்களுக்குள்ள தேவைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

மேலும் வட்டுக்கோட்டை பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சிறுவர் பாடசாலை அமைப்பு பணிகள் குறித்தும் ஆராய்ந்துள்ளார். (ம-9)

## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள நாகபூஷனி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் நாளை சனிக்கிழமையில் இருந்து செவ்வாய்க்கிழமை வரை (4,5,6,7) ஆகிய திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி 2-ம் ஒழுங்கை திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்தில் அருள் வாக்கு கூறுவார்.

அருள்வாக்கின் மூலம் திருமணதடை, கல்வித்தடை, வெளிநாட்டு பயணத் தடை, குழந்தை பேறு, குடும்ப பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வினை பெற்றுத்தருவார்.

**பூஜை நேரம்- காலை 10.00 மணி**
**மாலை 5.00 மணி**

செவ்வாய்க்கிழமை அபிஷேகமும் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும்.

**குறிப்பு:-கலாசார உடையுடன் வருகை தரவும்.**
**தொடர்பு-0212219127/0778012226** (5240)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்-2018

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பபடிவங்கள் 04.08.2018 தொடக்கம் 13.08.2018ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 02.30 மணி வரை விநியோகிக்கப்படும்.

14.08.2018 செவ்வாய்க்கிழமை காலை 9.30 வரை படிவங்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு காலை 10.00 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறை வரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

குறிப்பு-1ஆவது கேள்வியில் சித்தியடைந்தோர் கடைக்கான தொகையினை 2018.08.03-ம் திகதி பி.ப 3.00 மணிக்குள் செலுத்தத்தவறின் அக்கடைகள் மீள் கேள்விக்கு உட்படுத்தப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்** (சி-3415)

# சேவைநலன் பாராட்டு



Best Wishes

எமது பாடசாலையில் 19 வருடங்கள் சேவையாற்றி இன்று (03.08.2018) இளைப்பாறிச் செல்லும் எமது சைவசமயம், தமிழ் மற்றும் சகோதர மொழி பாட ஆசிரியர்

**திருமதி இரஞ்சிதமலர் சிவகுமாரன் (SLTSI)**

அவர்களின் சேவையைப் பாராட்டி மகிழ்வதோடு அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/ஏழாலை மகா வித்தியாலயம்**
(5247)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்
**செல்வநாயகம் நகுலேந்திரன் (ரவி)**



எமது நிறுவனத்தின் பழைய மாணவன் ந.கபில்ராஜ் மற்றும் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களாகக் கடமையாற்றிய பழைய மாணவிகளான செல்வி ந.அபிலா, செல்வி ந.குகப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையார் அமரர் செல்வநாயகம் நகுலேந்திரன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் 29.06.1958 விண்ணில் 02.08.2018

**மதுரம் கல்வி நிறுவனம்**
**டச்சு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்**
**கல்விச் சமூகம்**
(5249)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. **பாலசுந்தரம் இரமணாகரன்** அவர்கள்



28.07.2018 அன்று இடம்பெற்ற யாழ்.மாவட்டப் பண்பாட்டுப் பெருவிழாவில் இளங்கலைஞர் விருதைப் பெற்றுள்ளமையால் மகிழ்வடைகின்றோம்.

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையும், மாவட்டச் செயலகமும் இணைந்து கலைத்துறைக்கு காத்திரமான பங்களிப்புச் செய்த யாழ்.மாவட்டக் கலைஞர்களை கௌரவித்த வகையில், எமது யா/ மாதகல் நுணசை வித்தியாலயத்தில் சித்திர ஆசிரியராக இரு நாட்கள் கடமையாற்றும் ஆசிரியரும் இளங்கலைஞர் விருதைப் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளமையையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**யா/மாதகல் நுணசை வித்தியாலயம்**
(5246)

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை இராமச்சந்திரன்



மண்ணில் **23.10.1935** விண்ணில் **02.08.2018**

உரும்பிராயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராமச்சந்திரன் நேற்று (02.08.2018) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் குலராஜவீரரத்தினதேவியின் அன்புக்கணவரும் அமரர் இராசம்மா-பொன்னுத்துரை அவர்களின் அன்பு மகனும் அமரர் குலத்துரை-அன்னரத்தினம் அவர்களின் மருமகனும் பூபதி, பூபாலன் அமரர்கள் பத்மாவதி, கமலாவதி, லீலாவதி, புஸ்பரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர்களான குலசேகரம், குலராஜசேகரம், குலவதி, குலராசவதி, குலஇரத்தினவதி மற்றும் குலவீரவதி, குலவீரசேகரம் குலோத்துங்கசேகரம், குலஇரத்தினசேகரம், குலஞானவதி, குலரஞ்சிததேவி அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.08.2018) முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேம்பன் லேன்,**
**உரும்பிராய் தெற்கு.**
**தகவல்:-குடும்பத்தினர்**
**0777964865**
(சி-3413)

**DATA**
Differently Able Tamils Association

# Differently Able Tamils Association
## தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு
## TAMIL PARA SPORTS



# தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா




சக்கரநாற்காலிகள்..
ஊன்றுகோல்கள்..
வெண்பிரம்புகள்..
வந்து பாருங்கள்.

**ஓகஸ்ட் 04 05**

## துரையப்பா விளையாட்டரங்கு

சனி மற்றும்
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி

ஒரு மாலை
மாற்றுத்திறனாளிகளோடு.....

**இந்திய மற்றும் ஐரோப்பிய முன்னணி கலைஞர்கள் மாற்றுத்திறனாளி கலைஞர்களோடு பங்குபெறும் மாபெரும்**

# இசைநிகழ்ச்சி

ஞாயிற்றுக்கிழமை

**ஓகஸ்ட் 05**
மாலை 7 மணி

யாழ்ப்பாணம்
நகரசபை
மைதானம்

(சி-3409)

# அரசியலில்...

மை தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மூன்று தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியால் கூட்டப்பட்ட 48 பேர் கொண்ட கூட்டத்தில் மிக்க மனவருத்தத்துடன் கலந்து கொள்ளாது விட்டேன். காரணமும் கூறினேன்.

ஜனாதிபதி எனக்கு மிகவும் வேண்டியவர். அவரின் மனதைப் புண்படுத்த எனக்கு எந்தவிதத்திலும் தேவையுமில்லை, மனமும் இல்லை. அவருக்கு என்னால் அரசியல் ரீதியாகத் தெரிவிக்கப்பட்ட கருத்து எதற்கானது எங்களை நாங்களாக வாழ உதவி புரிய வேண்டும் என்பதே.

நீங்களாக முடிவெடுத்து எம்மை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காதீர்கள் என்பதையே அவருக்கு சுட்டிக் காட்டினேன்.

சந்திரிகா அம்மையாருக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த டி.பி. விஜயதுங்க சிங்கள மக்கள் மரமென்றால் சிறுபான்மையோர் அதைச் சுற்றி வளரும் கொடி போன்றவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்றார்.

அந்தக் கருத்துடன் எமக்கு ஏற்பில்லை. எம்மையும் சிறு மரங்களாக நாம் விரும்பும் விதத்தில் வாழ வழி வகுத்துத் தாருங்கள் என்பதே எமது கோரிக்கை.

இன்று சந்திரிகா அம்மையார் இந்த நிகழ்வில் இங்கு பங்குபற்றி எம்மை ஊக்குவிக்கின்றார் என்றால் அவரின் கருத்துக்களும் மேலிருந்து எமக்கு என்ன செய்ய வேண்டும் என்று ஆணை இடுவதை விட்டு கீழிருந்து நாம் செய்வதை உன்னிப்பாக கவனித்து எம்மை உயர்வடைய வைக்க அவர் ஆயத்தமாக இருக்கின்றார் என்று அர்த்தம்.

எமக்கென சுயாட்சி தந்து எம்மை நாமாகத் திறம்பட விருத்தியடைய வைக்க உதவ வேண்டும் என்று கேட்கின்றோம். சுயாட்சி தந்து எம்மை நாமே ஆளவிடுங்கள் என்று அரசியலில் நாம் கோருகின்றோம்.

நீங்கள் மத்தியில் இருந்து தாய்க் கோழி குஞ்சுகள் வளர்வதைப் பக்குவமாய்ப் பார்த்து வருவது போல் எங்களைப் பார்த்து வாருங்கள் என்றே எமது அரசியல் கருத் துக்களை வெளியிட்டு வரு கின்றோம்.

இன்று தொழில் முயற்சியாண்மையை ஆதரிக்கும் நீங்கள் அரசியலிலும் எமது முயற்சியாண்மையை ஆதரிக்க முன்வர வேண்டும். நாங்கள் பிரிந்து சென்று விடுவோம் என்ற கருத்துக்கு இடமில்லை.

ஏனென்றால் மத்தி தாயாக வாழ எத்தனித்தால் மாகாணங்கள் தனையர்களாகவே இருக்க ஆசைப்படுவார்கள்.

அதே வாழவைக்கும் இந்தக் கருத்தை எமது அரசியல் யாப்பிலும் உள்ளடக்கி பிராந்திய சுயாட்சியை உத்தரவாதப்படுத்த அம்மையார் முன்வர வேண்டும்.

அவரே முதன்முதலில் பிராந்தியங்களின் ஒன்றுகூடிய நாடே இலங்கை என்ற கருத்தை 2000ஆம் ஆண்டளவில் எமது அரசியலில் முன்வைத்தவர் என மேலும் தெரிவித்தார்.(ம-9)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 06 - 01 - 1972



உதிர்வு 04 - 07 - 2018

**அமரர் பிரான்சிஸ் பவுலப்பு இயஸ்ரின் றொசைஸ் (சைமன்)**

எமது அன்புச் சகோதரனின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் பத்திரிகை மூலமும் தொலைபேசி மூலமும் துயரைப் பகிர்ந்து கொண்டோருக்கும் அவரின் இறுதிப் பயணத்தில் கலந்து உதவி செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது அன்புச் சகோதரனின் ஆன்மா இறைவனில் அமைதி பெற இன்று (03.08.2018) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் அனைவரும் பங்குகொண்டு இவருக்காக செபிக்க அழைக்கின்றோம். திருப்பலி முடிந்த பின் எமது இல்லத்துக்கு வருமாறு அன்போடு அழைக்கின்றோம்.

**5-ம் வட்டாரம், மண்டைதீவு.** **குடும்பத்தினர்**


## பெண் ஊழியர் தேவை

**RAVEENS EMC - KARAVEDDY**

மேற்படி கல்வி நிலையத்துக்கு பெண் ஊழியர் உடன் தேவைப்படுகின்றார்.

- Computer Typing - தமிழ், ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.
- ஆங்கில அறிவு தேவை
- A/L Bio படித்தவர்களுக்கு முன்னுரிமை
- தொடர்புக்கு 021 226 3321
- சம்பளம் திறமையை பொறுத்து வழங்கப்படும்

(C-3416) ப.ஈஸ்வரநாதன், நிர்வாகி

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532


# மரண அறிவித்தல்

"கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" *பிலிப்பியர் 1:21*

## சுதாகர் ஆகீஷ்

தோற்றம் 08.11.2012 மறைவு 02.08.2018



சங்குவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுதாகர் - ஆகீஷ் அவர்கள் நேற்று (02.08.2018) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் சுதாகர் - ஜீவா தம்பதிகளின் அன்பு மகனும் லக்ஷனா, அபிஷா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஐயாத்துரை - செல்வராணி, தம்பித்துரை - ஜெயமணி தம்பதிகளின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.08.2018) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று திருவுடல் பிப்பிலி மயானம் மானிப்பாயில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சங்குவேலி தெற்கு** தகவல்:- **குடும்பத்தினர்**

(5251)

# வல்வைப் படுகொலை நினைவேந்தல்








(கரணவாய்)

வல்வைப் படுகொலையின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வல்வையில் முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகப் போராளி கள் கட்சி ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில், கடந்த 1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி வல்வையில் 63 பொது மக்கள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலை செய் யப்பட்ட பொதுமக்களை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த மக்களின் உருவப்படங்களுக்கு தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-9-60)

## நில விடுவிப்பு தொடர்பில் செபஸ்தியார் ஆலய பங்கு மக்கள் பிரதேச செயலாளருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி வடக்கு புனித செபஸ்தியார் ஆலயப் பங்கு மக்களின் நிர்வாகக் குழுவின் தலைவர் இ.அருளானந்தம் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 10.00 மணியளவில் வலி.வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

பலாலி புனித செபஸ்தியார் ஆலய பங்கு மக்களால் ஏற்கனவே கையளிக்கப்பட்ட மகஜர் குறித்து நிர்வாகக் குழுவினரால் நினைவூட்டப்பட்டதன் பிரகாரம், பிரதேச செயலர் உடனடியாக இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அப்பகுதி மக்களின் மீள் குடியமர்வு தொடர்பான கோரிக்கையை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து நிர்வாகக் குழு அடங்கிய மக்களுடன் கலந்துரையாடிய பிரதேச செயலர் அடுத்து நடைபெறவுள்ள யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் மேற்படி விடயம் குறித்துதான் உங்களுடைய மீள்குடியேற்றம் குறித்த கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அக்கூட்டத்திற்கு புனித செபஸ்தியார் ஆலய நிர்வாகக் குழுவையும் சமுகமளிக்கும்படியும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (இ-7)


# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலாரும்)
- பத்திரிகை மடிப்பவர் (ஆண்கள்)
- பத்திரிகை விநியோகஸ்தர்கள் (ஆண்கள்)

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை

பொதுமுகாமையாளர்
வலம்புரி, இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு எதிர்வரும் 07.08.2018 ஆம் திகதிக்கு முன்னர் சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு: ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.**

விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிடுவது அவசியம்.

வலம்புரி- பொது முகாமையாளர்



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்.

## இராசதுரை ஸ்ரீமோகனராசா

(மோகன்)



தோற்றம்:1967.04.23 | மறைவு 2018.07.04

கடந்த 04.07.2018 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர்.இராசதுரை ஸ்ரீமோகனராசா (மோகன்) அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று 02.08.2018 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்றைய தினம் 03.08.2018 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வளர்பிறை. ஊரெழு கிழக்கு. -குடும்பத்தினர்-


# இராசி பலன்

**மீனம்:** அரைகுறையாக இருந்த பணிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, வியாபார விருத்தியுண்டு, ரோக பயமுண்டு.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கனவு பலிதம் உண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மகரம்:** உறவினர்களுடன் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை ஏற்படும், வருங் காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்.

**இராசி பலன் - கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை பகல் 11.48 மணிக்கு மேட-சந் | | சூரி. புத. ராகு |
| கேது. செவ். | | | |
| சனி | | குரு | சுக் |

03.08.2018
ஆடி 18, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சஷ்டி முற்பகல் 8.40 மணிவரை
ரேவதி முற்பகல் 11.49 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
ஆடிப்பண்டிகை

வளவன்

**தனுசு:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் கூடும்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த குழப்பங்கள் குறையும் வாய்ப்புண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சுப காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டியநாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

# வீதியோரங்களில் திரியும் நாய்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை வேண்டும்

## ஈ.பி.டி.பியின் மாநகரசபை உறுப்பினர் றீகன்



(யாழ்ப்பாணம்)

வீதியோரங்களில் திரியும் கட்டாக்காலி நாய்களால் மட்டுமல்லாது வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களாலும் வீதியோரங்களில் செல்லும் மாணவர்களும் பொது மக்களும் பாதிக்கப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் றீகன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.மாநகரசபையின் மாதாந்த அமர்வு கடந்த 31 ஆம் திகதி முதல்வர் தலைமையில் நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கொட்டப்படும் கழிவுகளால் ஒருபக்கம் மக்கள் அவதியுற்றுவரும் நிலையில் கட்டாக்காலி நாய்களாலும் வீட்டு வளர்ப்பு நாய்களாலும் மக்கள் மட்டுமல்லாது பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களும் நாளாந்தம் அதிகளவில் பாதிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் அதிகளவான பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றுக்கு காலை வேளைகளில் மாணவர்கள் செல்லும் போது வீட்டு நாய்கள் முதல் கட்டாக்காலி நாய்கள் வரை துரத்தி அச்சுறுத்துவதும் ஒரு சிலருக்கு கடித்து காயப்படுத்தும் அவல நிலையும் ஏற்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்களே அதிகம் பாதிக்கின்றனர்.

அதுமட்டுமல்லாது வீதிகளின் குறுக்காக திடீரென பாயும் நாய்களால் அதிகளவான வாகன விபத்துக்களும் ஏற்பட்டு பலர் பாதிப்புறுகின்றனர். இந்த நிலையை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-9)

# சர்வதேச கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

90ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா நல்லூர் கந்தர்மடத்தில் அரசடி வீதியில் அமைந்துள்ள சமூக அபிவிருத்தி கூட்டுறவு சங்க அரங்கில் நாளை முற்பகல் 10 மணியளவில் சமூக அபிவிருத்தி கூட்டுறவுச் சங் கத் தலைவர் சி.குமாரலிங் கம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான பொ. வாகீசன் கல ந்து கொள்வாா.

கௌர விருந்தினராக கூட்டுறவுத் திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன், சிறப்பு விருந்தினர்களாக பத்திரிகை எழுத்தாளரும் யாழ். மாவட்ட இணைப்பு செயலாளருமான எஸ்.ஜெயசங்கர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஸ்ரீகுமார் ஆகியோர் கலந்துகொள்வார்.

இதில் உள்ளகக் கணக்காய்வாளரும்முன்னாள் சங்க செயலாளருமான பொன்னையா சண்முகசுந்தரம், சமூகஅபிவிருத்திமன்றமுன்னாள் தலைவரும் பணிப்பாளர் சபை உறுப்பினருமான பி.ஏ.சி.குணேந்திரன் ஆகியோர் கௌரவிக்கப்படுவர். (இ)




# நிழற்பிரதி இயந்திரம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து 2018ஆம் ஆண்டின் பிரமாண அடிப் படையிலான மூலதன நன்கொடை நிதியில் கல்விச் செயற்பாட்டு தேவைகருதி யாழ். கோப்பாய் மகா வித்தியாலயத்திற்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் ஒன்றை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் வழங்கினார். (இ-60)

# தந்தையை இழந்த பெண்பிள்ளைகள் அச்சமின்றி வாழ வழியேற்படுத்துங்கள்

## ஜனாதிபதிக்கு சிறிதரன் எம்.பி. கடிதம்



(யாழ்ப்பாணம்)

கடற்படையால் கொல்லப்பட்ட மீனவரின் இறப்புக்கு நீதி கோரியும் குடும்பத்தினர் அச்சுறுத்தல் இன்றி வாழ்வதற்கு வழிசமைக்குமாறு கோரியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் யாழ். ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எழுவைதீவின் 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அன்ரனி ஜேசுதாசன் என்பவர் கடந்த 2014.12.19 ஆம் திகதியன்று அதிகாலை எழுவைதீவுக் கடலிலே தொழில் செய்து கொண்டிருந்த போது கடற்படையினரின் டோறாப்படகினால் தாக்கப்பட்டு படுகாயங்களுக்குள்ளாகி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மிக வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பெண் பிள்ளைகளின் தந்தையான இவரது திடீர் மரணம் ஏற்கனவே தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த அவரது பெண் பிள்ளைகளை நிர்க்கதிக்கு உள்ளாக்கியுள்ளது.

அவருடைய மரணச்சடங்கின் போது கடற்படைக் கட்டளைத் தளபதி உள்ளிட்ட அதிகாரிகள் கடற்படையினரின் கவனயீனத்தினாலேயே குறித்த மரணம் நிகழ்ந்தது என்பதை ஏற்றுக்கொண்டதுடன், அதற்கான இழப்பீட்டை வழங்குவதாகவும், பிள்ளைகளின் கல்விச்செலவு, வேலைவாய்ப்பு, எதிர்காலம் என்பவை தொடர்பில் அக்கறை காட்டுவதாகவும், அன்ரனி யேசுதாசனால் செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவைகளை தாமே செலுத்தி முடிப்பதாகவும் உறுதியளித்து நான்கு ஆண்டுகள் நிரம்புகின்ற நிலையில் அவ்விடயங்களில் ஒன்றையேனும் செயற்படுத்தாதுள்ளமை ஏற்கனவே தாயை இழந்து, தந்தையின் இழப்பால் தனித்துப்போன பிள்ளைகளை மேலும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

இந்நிலையில் விபத்துக்குள்ளாகி இறந்துபோன அன்ரனி யேசுதாசனின் மரணம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு தற்போது நடைபெற்றுவரும் நிலையில் வழக்குத் தொடுநரான அன்ரனி யேசுதாசனின் மகள் மேரி அஜந்தாவுக்கு பொலிஸாராலும், கடற்படையினராலும் தொடர்ச்சியாக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

கடற்படையினரால் அநியாயமாகக் கொல்லப்பட்டவருடைய மரணம் தொடர்பில் அவரது குடும்பத்திற்கு இழப்பீடோ, ஏனைய உதவிகளோ இன்றுவரை வழங்கப்படவில்லை.

நான்கு ஆண்டுகளாக பொலிஸாராலும், கடற்படையினராலும் தொடர்ச்சியாக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படும் சூழலில் இப்பெண்பிள்ளைகள் எழுவைதீவு மண்ணிலே வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மரணத்திற்கு முறையான நீதி கிடைக்க ஆவன செய்வதோடு, தாய், தந்தை இருவரையும் இழந்து, வாழ்வாதார வழிகளற்றும், உயிரச்சுறுத்தலோடும், உளரீதியான நெருக்கடிகளுக்குள்ளும், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்றி வாழ்ந்து வரும் இப்பெண்பிள்ளைகளின் பேரவல வாழ்வை கருத்திற்கொண்டு அவர்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் நிம்மதியாகவும், சுபீட்சமாகவும், உயிர் அச்சுறுத்தல் இன்றி வாழ்வதற்கும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு மேலும் கோரப்பட்டுள்ளது. (இ-9)



சுட்டைவேலி பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கட்டடம் அமைப்பதற்கு பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதனால் 15 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. இந்நிலையில் கட்டடத் திறப்பு விழாவை பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். (படங்கள்:-மகாலிங்கம்)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த அணி வகுப்பு மரியாதை கடந்த 31 ஆம் திகதி காலை 6 மணியளவில் நடைபெற்றது. இவ் அணிவகுப்பு மரியாதையை காங்கேசன்துறை மாவட்ட பொலிஸ் அதிகாரி உடுகம சூரிய, நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கீர்த்தி சிங்க மற்றும் சிவில் பொலிஸார் பொறுப்பதிகாரி விமல்வீர ஆகியோர் கலந்து கொண்டு ஏற்றுக்கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# யா/இணுவில் இந்துக் கல்லூரி சமூகத்தின் சார்பில் மணிவிழா நாயகிக்கு வாழ்த்துக்கள்-03.08.2018



**திரு.சிவஸ்ரீ சோ.பிரசன்னா குருக்கள்.**
**இணுவில் திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரன் ஆலயகுரு**
**இணுவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்**
**ஆசிரியர் தற்போது யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்.**

ஆசிரியன் என்னும் சுற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் பிரதி அதிபர், யா/இணுவில் இந்துக்கல்லூரி அவர்கள் கற்பித்தலில் பாடப்புத்தகம் பாராது பாடம் நடத்தியவர். இவ்வகையில் ஆசிரியத்துவத்தை இப்பொழுதும் எல்லோருக்கும் கற்பித்து விடுகிறார். ஓய்வுபெற்று மணிவிழா காண்பதும் நம் ஆசிரியை ஆயிரம் பிறைகண்டு அவரது பணி எம் அனைவருக்கும் முன் உதாரணமாக அமைகிறது.எல்லாம்வல்லகணபதியானும்சுந்தனும்நீண்டஆயுளும்ஆரோக்கியமும் ஆசிரியர் அவர்களுக்கு கிடைக்க நல்லாசிகள் கூறுகின்றோம்.

**மனஸ்சேன்னலக்னம் குரோரஸ்ரீ பத்மே**
**ததகிம் ததகிம் ததகிம் ததகிம்(ஆதி சங்கரர் குரு அஷ்டகம்)**



**அதிபரின் வாழ்த்துச் செய்தி**

யா/இணுவில் இந்துக் கல்லூரியின் 153 ஆண்டு கலை வரலாற்றில் நீண்டகாலம் 28 ஆண்டுகள் கல் லூரி வளர்ச்சியில் அயராது உழைத்த ஓர் உன்னத ஆசிரியர் ஓய்வு பெறுவது கல்லூரிக்கு பேரிழப்பாகும். இக்கல்லூரியின் மிக நெருக்கடியான காலகட்டங்களில் அவருடைய தனித்துவமான குணங்களால் அமைந்த பொறுமை அந்நெருக்கடிகளிலிருந்து தன்னையும் கல்லூரியையும் பாதுகாத்த பெருந்தகையார். அவரிடம் புவியியல் பாடம் கற்று பல்கலைக்கழகம், கல்வியியற்கல்லூரி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் கற்றுத் தேறியோர் ஏராளம். அவரிடம் கற்ற அநேகர் இன்று பல உயர் பதவிகள் அலங்கரிப்பது கண்கூடு.

ஒழுக்கம் கண்டிப்புடன் மாணவரில் அவர் கொண்ட உண்மையான அன் பும் அக்கறையும் இன்றும் அவரிடம் கற்று உயர் பதவி வகிப்போர் ஆசிரியரிடம் காட்டும் பக்தி மரியாதையில் இருந்து கண்டுகொள்ள முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் ஆசிரியராக அவரிடம் காணப்பட்ட சமூக சிந்தனை மிகவும் வியந்து பாராட்டத்தக்கதாகும். மாணவர்களையோ அவர்களின் பெற்றோர்களையோ அவர்களின் பொருளாதார, சமூக நிலைகளிலிருந்து நோக்காது அவர்களின் பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களின் பால் நிற்கும் ஓர் உயரிய தார்மீக குணத்தை அவரிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் கண்டு பரவசமடைந் துள்ளேன். இவர் 2016 ஆம் ஆண்டிலிருந்து பிரதி அதிபராக கல்வி அபிவிருத்தி துறைக்கு பொறுப்பாக இருந்து, மாணவர் அடைவுகளில் சிறப்பான நிலைக்கு உயர்த்தியவர். உண்மையான ஓர் பிரதி அதிபராக, அதிபர் இல்லாத சந்தர்ப்பங்களில் கல்லூரியை சிறப்பாக இயக்க வழி அமைத்த வராவார். அவரிடம் காணப்பட்ட முகாமைத்துவ ஆற்றலை பார்த்து நான் வியப்படைந்த சந்தர்ப்பங்கள் பல. ஆசிரியர்கள் மனதை நோகடிக்காது இருக்கும் திறன் சிறப்பானதாகும்.

இப்படியான ஓர் சிறந்த ஆசிரியர்/ பிரதி அதிபர் பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்வது தனிப்பட்ட ரீதியில் அதிபராகிய எனக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். இருப்பினும் காலத்தின் கட்டளையை ஏற்று தனது ஓய்வுக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் சுகமாக மகிழ்ச்சியாக வாழ இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**அதிபர் திரு.தி.தேவதயாளன்.**



**நம்பிக்கை நிதியப் பொறுப்பாளரின் வாழ்த்து**

எமது கல்லூரியில் கடந்த 28 ஆண்டுகள் சேவை யாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி. நகுலேஸ்வரி சண்முகநாதன் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற் காகவும் ஆற்றிய சேவையை நாம் நன்கறிவோம். வாழ்த்துகின்றோம் ஆசிரியை அவர்கள் ஓய்வுக்காலத்தில் நோய் நொடி இன்றி பல்லாண்டு வாழவென் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**நா.சுந்தரலிங்கம் (தலைவர்)**
**நிதிய உறுப்பினர்கள் சார்பில் இணுவில் இந்து**
**கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் இந்துக்கல்லூரி, இணுவில்.**



**திருமதி நகுலேஸ்வரி-சண்முகநாதன் (BA)**
**பிரதி அதிபர்**
**ஆசிரிய நியமனம்- 12.03.1984- 11.02.1990**
**கொ/ விவேகானந்தா மகா வித்தியாலயம்**
**ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபர் - 12.02.1990-03.08.2018 - யா/ இணுவில் இந்துக் கல்லூரி**



**ஆசிரியர் நலன்புரி கழகத் தலைவரின் வாழ்த்து**

எமது பாடசாலையின் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக இருந்து இன்றையதினம் ஓய்வு பெறும் திருமதி. நகுலேஸ்வரி சண்முகநாதன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை யா/இணுவில் அமெரிக்கன் மிஷன் த.க. பாடசாலையிலும் பின்னர் இராமநாதன் கல்லூரியிலும் கற்று யாழ்.பல்கலைக்கழக கலைப் பட்டதாரியாக வெளியேறியவர். இவர் தனது ஆசிரிய சேவையை கொ/விவே கானந்தா கல்லூரியில் முதல் நியமனம் பெற்று (1984.03.12-1990.02.11) 5 வருடங்களாக பணியாற்றியவர். பின்னர் எமது கல்லூரிக்கு 1990.02.12 ஆம் திகதி இடமாற்றம் பெற்றுக் கடந்த 28 வருடங்களாக பணியாற்றி வந்தவர். திரு.கமலநாதன், திரு.க.கனகராஜா, திரு.சிவசண்முகசுந்தரமூர்த்தி, திரு.சி.குபேரநாதன், திரு.விசச்சிதானந்தன், சி.கிருபாகரன், திரு.சு.சண்முககுலகுமார், திரு.தி.தேவதயாளன் (தற்போதைய அதிபர்) ஆகிய எட்டு அதிபர்களின் கீழும் அதிபர்கள் நியமிக்கப் படாத காலங்களிலும் கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்தவர். சைவப் பிரகாசம், இணுவில் இந்து. இந்து நாதம் என்னும் நூல்கள் வெளியிடப்பட்டது டன் ஆசிரியரின் ஆசிரியர் சேவையின் 25 வருட பூர்த்தி விழா பாடசாலைச் சமூகத் தால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவரின் சிறப்பான பணிக்கு உதவியாக அவரது கணவர் திரு.மு.சண்முகநாதன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப சேவையாளர், இலங்கை மின்சார சபை) அவர்களும் உறுதுணையாக இருந்து பணியாற்றியுள்ளார். அவரின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம்வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மற்றும் இணுவில் கந்தனையும் வேண்டி நிற்கின்றேன்.

**திரு.ஜெயகாந்தன்**
**தலைவர் ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/இணுவில் இந்துக் கல்லூரி.**


**சக்திவேல் ஹாட்வெயார்**
**தொ.பே.இல.021 492 1213, 077 624 7130**
**கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (இணுவில்)**




**ஆளுமைமிக்க பிரதி அதிபர்**

இணுவில் இந்துக்கல்லூரியின் பிரதி அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறும் திருமதி.நகுலேஸ்வரி சண்முகநாதன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். 1958 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி பிறந்த அவர் முதலில் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியிலும் பின்னர் 1990 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இணுவில் இந்துக் கல்லூரியிலும் பணியாற்றியிருப்பது எமது கல்லூரியில் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டினையும் பற்றி னையும் எடுத்துக் காட்டுகின்றது. எல்லோரிடமும் அன்பாகப் பழகும் அவரது சுபாவம் அதிபர், ஆசிரியர்களுக்கிடையே அவருக்கு நல்லு றவை ஏற்படுத்தியது மட்டுமன்றி மாணவர்களுக்கிடையே அன்புப் பிணைப்பைக் கொண்டுவந்தது. பெற்றோருடனும் பழைய மாணவர் களுடனும் அவர் பழகும் விதம் அவர்களுக்கிடையிலான பாசப் பிணைப்பைக் கொண்டு வந்ததனைக் கூறுதல் வேண்டும். அவர் எந்தவொரு கட்டளையைப் பிறப்பித்தாலும் அதனை முன்னின்று நடாத்த பாடசாலைச் சமூகத்தினர் ஆயத்தமாக இருந்தனர் என்பது தான் அவரின் வெற்றிக்குக் காரணமாகும்.

திருமதி.சண்முகநாதன் அவர்கள் தனது பணியை சிறப்பாக நிறைவேற்றி இளைப்பாறுவது கண்டு பாடசாலையின் நலன்விரும்பி என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன். ஆயினும் இளைப்பாறிய தன் பின்னரும் அவரது ஆலோசனையும் வழிகாட்டலும் எமது கல்லூரிக்குக் கிடைக்க வேண்டும் என்பது எமது வேணவாவாகும். எமது பிரதி அதிபர் இளைப்பாறியதன் பின்னரும் நல்ல உடலாரோக் கியத்துடன் தமது குடும்பத்தினருடன் நீண்டகாலம் வாழ வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி எனது வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வாழ்க வளமுடன் என வாழ்த்தும்**
**பேராசிரியர்.க.தேவராசா**
**தலைவர்/சுற்றுலாப்பணியகம் வடமாகாணம்.**



**பழைய மாணவர் சங்க செயலாளரின் வாழ்த்துரை**

எமது பாடசலையில் சேவையாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளுள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்களில் திருமதி சண்முகநாதன் நகுலேஸ்வரி ஆசிரியர் மிகவும் முக்கியமானவர். ஆசிரியை அவர்கள் 1990ஆம் ஆண்டளவில் யா/இணுவில் இந்துக்கல்லூரியில் கடமைப் பொறுப் பேற்று இற்றைவரை ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக எனப் பல பரிமாணங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்.

ஆசிரியை அவர்கள் தன்னுடைய சேவைக்காலத்தில் என்னைப் போன்ற பல மாணவர்களை உருவாக்கி நல்ல நிலையில் வாழ வழிகாட்டியவர். மாணவர் மத்தியில் ஒழுக்கம், பண்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடா முயற்சி, பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்த உன்னதமான ஆசிரியை.இவரது ஓய்வுக்காலம் என்பது எமது பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் பேரிழப்பாகும். ஏனெனில் பாடசாலை வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட சவால்கள் மற்றும் பிறழ்வுகளின் போது அதிபர், மணவர் களுக்கு துணையாகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டவர். இவர் தனது ஓய்வுக் காலத்தில் நல் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் குடும்பத்தினருடன் வாழ வேண்டுவதுடன் நீண்ட காலம் நீடு வாழவும் எல்லாம் வல்ல பரராஜசேகரனை பணிந்து வணங்குகின்றேன்.

**திருமதி. பாலகுமாரி ஐங்கரன் சமூகவியலாளர்,**
**தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபை,**
**யாழ்ப்பாணம்.**

**அனுசரணைகள்**

(5344)

**வைத்திய கலாநிதி திரு.பா.ஞானசேகர்**
**பழைய மாணவன்**
**யா/இணுவில் இந்துக் கல்லூரி.**

# தலைவர் பிரபாகரனின் உருவப்படம் பயன்படுத்திய இருவருக்கு மறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப்படம் மற்றும் விடுதலைப் புலிகளின் இலட்சனையை பயன்படுத்திய இருவரை 10 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப்படம் மற்றும் விடுதலைப்புலிகளின் இலச்சினை ஊடாக முகநூலில் புதுவருட வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இந்நிலையில் இரத்தினபுரியை சேர்ந்த தினேஸ் குமார் மற்றும் விதுஷன் என்ற இருவரும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணையானது கொழும்பு மேலதிக நீதவான் லக்மாலி ஜயதுங்க முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த இருவர் தொடர்பிலும் மேலதிக நடவடிக்கைகள் சட்டமா அதிபரின் ஆலோசனையின் கீழ் இடம்பெறும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(இ-7)

# பார்த்தீனியம் ஒழிப்பு குறித்து இன்று யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் அதிகமான பிரதேசங்களில் பார்த்தீனியம் களை பரவியுள்ளமை சகலரும் அறிந்த விடயமாகும். இக் களையானது விவசாயத்திற்கும் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

தாவரப் பாதுகாப்புச் சட்டம் 35/1999 மற்றும் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1163/23 என்பவற்றிற்கமைவாக விவசாய அமைச்சு மற்றும் விவசாய திணைக்களத்தினால் பார்த்தீனியத்தை அழிப்பதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக விவசாய அமைச்சர், வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் இன்று 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் க.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (இ)

# கைதிக்கு ஹெரோயின்
## நேற்று ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு. புதுக்கடை நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்து செல்லப்பட்ட கைதியொருவருக்கு போதைப் பொருள் வழங்க முற்பட்ட ஒருவரை வாழைத்தோட்ட ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் நேற்றுக் கைதுசெய்துள்ளனர். அத்துடன் இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பேலியகொடை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவரிடமிருந்து 10 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இந்தியாவால் இலங்கைக்கு 750 பொலிஸ் ஜீப் வண்டிகள்

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸாரால் பொதுமக்களுக்கு வழங்கும் சேவைய்யை மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேவையை விரிவுபடுத்துவதற்காக இலங்கை பொலிஸாருக்கு மேலதிக ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கை பொலிஸாருக்கு 600 ஜீப் வண்டிகளும் பொலிஸ் அதிரடிப்படைக்கு 150 ஜீப்வாகனங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இவை இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்காக அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம், சட்டம் ஒழுங்கு அமைச்சின் தீர்மானத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# இலங்கையில் எரிபொருள் ஆய்வு; கேள்வி மனுக்களைக் கோர அனுமதி

(கொழும்பு)

உள்ளூர் வளங்கள் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய எரிபொருள் மற்றும் எரிவாயு சக்திகளை பயன்படுத்துவதன் மூலம் குறிப்பிடத்தக்க பொருளாதார நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் இருப்பதாக நம்பப்படும் மன்னார் கடல் பிரதேசத்தில் எரிபொருள் நிறுவனம் மற்றும் புவியியல் விஞ்ஞானவியலாளர்களின் கூடிய ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

இதற்கமைவாக பிரதேசத்தில் எரிபொருள் இருப்பதாக எதிர்பார்க்கப்படும் பிரதேசங்களில் எரிபொருள் ஆய்வு. அபிவிருத்தி மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கான சர்வதேச எரிபொருள் நிறுவனங்களிடமிருந்து கேள்வி மனுக்களை கோருவதற்காக கனியவள அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



**திருமதி.**
**கிரியாவதி யோகராசா**

கடமையைக் கண்ணெனப் போற்றினீர்!
தாய்மையுணர்வுடன் பணியாற்றினீர்!
மகிழ்ச்சியுடன் அனைவருடனும்
அன்பாகப் பேசி அரும்பணி புரிந்தீர்!
அலுவலகப் பணியாளராய் உம் பணியைத்
தொடங்கி விடுதி உதவியாளராக
விருப்புடனே கடமை புரிந்தீர்!
உங்களின் ஓய்வுக்காலம்
என்றும் சிறப்புடன் விளங்கவும்
சகல சௌபாக்கியங்களும் பெற்று
வாழ வாழ்த்துகிறோம்.


வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக் கழகம்.
யாழ். கனகரத்தினம் ம.ம.வி.

(5238)

# போர்க்களமானது முல்லைத்தீவு நீரியல்வளத் திணைக்களம் முற்றுகை

## கலகம் அடக்கும் பொலிஸார் குவிப்பு








(கண்டாவளை)

முல்லைத்தீவில் சட்ட விரோத மீன்பிடி தொழிலை உடனடியாக நிறுத்துமாறு கோரி ஆயிரக்கணக்கான மீனவர்கள், மக்கள் எனப் பலர் ஒன்றுதிரண்டு நேற் றுக் காலை பாரிய ஆர்ப் பாட்டம் ஒன்றினை மேற் கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவு சுனாமி நினைவாலயம் முன்பாக ஆரம்பமான பேரணி முல் லைத்தீவு பொதுச்சந்தை வழியூகச் சென்று நகரை சென்றடைந்து அங்கிருந்து மாவட்ட கடற்றொழில் நீரி யல்வள திணைக்களத்தை சென்றடைந்தது. அங்கே சென்ற மீனவர்கள் சட்ட விரோத மீன்பிடியை தடை செய்யுமாறு கோரி கோஷ ங்களை எழுப்பினர்.

அத்தோடு, நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணி ப்பாளர் தம்மை சந்திக்க வேண்டும் என நீண்டநேர மாகக் காத்திருந்தனர்.

மிக நீண்டநேரம் காத் திருந்த மக்களை எவரும் சந்திக்காத நிலையில் ஆத் திரம் அடைந்த மக்கள் பொலிஸாரின் தடையையும் மீறி வேலிகளை உடைத்து திணைக்களத்தினுள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.






இதன் காரணமாக பல யன்னல் கண்ணாடிகள் நொறுங்கியதோடு, சுற்று வேலியும் முற்றாக தகர்க்கப் பட்டுள்ளது. இதனைத் தொட ர்ந்து அதிகளவான கலகம் அடக்கும் பொலிஸார் திணைக்களத்தைச் சுற்றி நிறுத்தப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் போராடும் மக்கள் நீரியல்வள திணை க்களம் முன்பாக பந்தல் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (7-281-315)

# எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் சந்தைக் கட்டடத்தொகுதி வேண்டாம்

## கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

தங்களது வாழ்வாதார த்தை அழிக்கும் புதிய மூன்று மாடி சந்தைக் கட் டடத் தொகுதி தேவையி ல்லை என்றும் மாறாக வர் த்தகர்களுக்கு ஏற்ற வகை யில் கனகபுரம் மற்றும் ஏ-9 பிரதான வீதியை நோக்கிய படி புதிய கட்டடத்தை அமைத்து தருமாறும் கிளி நொச்சி சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



நேற்று முன்தினம் கிளி நொச்சி பொதுச் சந்தையில் இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின் போதே அவர் கள் இவ்வாறு தெரிவித்துள் ளனர். அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்

நாட்டின் பல இடங்களில் மாடி சந்தைக் கட்டடத் தொகு திகள் வெற்றியளிக்கவி ல்லை. முக்கியமாக சனத் தொகை அதிகளவு கொண்ட யாழ்ப்பா ணம், வவுனியா மற்றும் தென்னிலங்கை யில் பல மாவட்டங்களில் மாடி சந்தைக் கட்டடங்கள் வெற்றியளிக்காத நிலையில் குறைந்தளவு சனத்தொ கையை கொண்ட கிளிநொ ச்சி மாவட்டத்தில் சந்தைக் கட்டடத்தை மூன்று மாடி யில் அமைப்பது வர்த்தகர் களாகிய எங்களை அழிவு க்கு கொண்டு செல்லும் ஒரு திட்டமே. எனவே எமது விரு ப்பத்திற்கு மாறாக எமக்கான கட்டடத்தை அமைக்க வேண் டாம் என அரசியல் தரப்பி னர்கள், அரச அதிகாரிகள், கரைச்சி பிரதேச சபையினர் ஆகியோரிடம் கேட்டுக் கொள் கின்றோம் எனத் தெரிவித்த வர்த்தகர்கள்,

எங்களது சந்தையின் தற்காலிக கட்டடம் தீயினால் அழிந்த போது வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் மத்திய அரசின் அமைச்சர் களுடன் பேசியதற்கு அமை வாக எமக்கு நட்டஈடும் புதிய கட்டடம் அமைப்பதற்கு 150 மில்லியன் ரூபாவும் ஒதுக் கப்பட்டது.

அதில் முதற்கட்டமாக 80மில்லியன் கடந்த வருடம் கிளிநொச்சி மாவ ட்டச் செயலகத்திற்கு அனு ப்பி வைக்கப்பட்டது. அதனை மாவட்டச் செய லகம் வீட்டுத்திட்டத் திற்கு பயன்படுத்தி விட்டது எனக் குறிப்பிட்ட வர்த்தகர் கள் தற்போது தங்களின் விருப் பத்திற்கு மாறாக மாவட் டத்தில் உள்ள அரசியல் தர ப்புக்கள், அதிகாரிகள் ஆகி யோர் தங்களின் விருப்ப த்தை எங்கள் வாழ்வாதார த்தின் மீது திணிக்கின்றனர்.

ஆகவே நாம் இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனவும் தெரி வித்தனர். (7-315)




# யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் புதிய கட்டடங்கள் பிரதமரால் நாளை திறப்பு

(கிளிநொச்சி)

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் புதிய கட்டடத் தொகுதி நாளை சனிக்கிழமை முற்ப கல் 11 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் இ.விக் னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ் வில் உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமை ச்சர் கலாநிதி விஜதாஸ ராஜ பக்ஷ, உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் இரா ஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு, உயர் கல்வி அமைச்சின் உயரதிகாரிகள், பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவின் தலை வர், உப தலைவர் மற்றும் வடமாகாண அரச திணை க்களங்களின் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் முத லானோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகப் பகு தியில் சுமார் 1600 மாண வர்களுக்கு விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நான்கு மாணவ விடுதிகள், உத்தியோ கத்தர்களுக்கான இரண்டு விடுதிகள், பொறியியல் பீடத் தின் மின்னியல் மற்றும் இலத் திரனியல் துறைக்கான மூன்று மாடிக் கட்டடம், கணனி பொறி யியல் துறைக்கான இரண்டு மாடிக் கட்டடம், பொறியியல் பீட நிர்வாகப் பிரிவுக்கான மூன்று மாடிக் கட்டடம் மற் றும் விருந்தினர் விடுதி ஆகிய கட்டடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத் தில் பொறியியல்பீடம், விவ சாய பீடம் மற்றும் தொழில் நுட்பபீடம் ஆகியவை இய ங்கி வருகின்றன. இக் கட்ட டங்கள் யாவும் சுமார் 2100 மில்லியன் ரூபா செலவில் திறைசேரி ஒதுக்கீட்டில் நிர் மாணிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (7-9)


# புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல்

(கிளிநொச்சி)

மிக நீண்ட காலமாக பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் இயங்கி வந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப அலுவலக மான முள்ளிப்பற்றுக்கான ஆயுள்வேதம்.நூலகத்துடன் கூடிய உப அலுவலகம் அமை ப்பதற்கான நிகழ்வுகள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன் தலைமையில் நடைபெற் றது.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமையப்பெற இருக்கும் இந்த கட்டடத் திற்கான காணியை சங் கரப்பிள்ளை குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியிரு ந்தனர்.

மாகாண சபையினு டைய குறித்தொதுக்கப் பட்ட நிதியிலிருந்தும், பிரதேச சபை நிதியிலிருந்தும் அமை யப் பெற இருக்கும் இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறி தரன் மற்றும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர்க ளுடன் சமூக ஆர்வலர் சங் கரப்பிள்ளை விக்னேஸ் வரன், பிராந்திய உள்ளூ ராட்சி ஆணையாளர் மற்றும் பிரதேச சபையின் செயலாளர் ஆகியோர் கல ந்து கொண்டனர். (7)



## புனித லோறன்சியார் ஆலயத்தின் 120 ஆவது திருவிழாக் கொடியேற்றம்



(மன்னார்)

தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தின் 120 ஆவது ஆலயத் திருவிழாவானது நேற்று முன்தினம் மாலை 6.15 மணியளவில் பங்குத்தந்தை அகுஸ்ரின் அடிகளாரினால் கொடியேற்றத்துடன் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அன்றையதினம் புனித அந்தோனியார் சபையைச் சேர்ந்த அருட்தந்தை சால்ஸ் அடிகளாருடன் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறைமக்களுக்கு ஆசீரும் வழங்கி திருப்பலி நிறைவுற்றது. (7)

# கள் விற்பனை நிலையங்களை அகற்றக்கோரி மக்கள் பேரணி





மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாப்பாமோட்டை மற்றும் ஆக்காட்டிவெளி ஆகிய இரு கிராமங்களிலும் மக்கள் குடியிருப்புக்கு அருகில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையங்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறும் குறித்த பிரதேசத்தில் போத்தல் கள் விற்பனையை முற்றாக தடை செய்யக் கோரியும் குறித்த இரு கிராம மக்களும் இணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை காலை பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த இரு கிராம மக்களும் இணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நெடுங்கண்டல் பிரதான வீதியில் தமது பேரணியை ஆரம்பித்தனர்.

இதன்போதுகலந்துகொண்ட மக்கள் பாப்பாமோட்டை மற்றும் ஆக்காட்டிவெளி ஆகிய இரு கிராமங்களிலும் மக்கள் குடியிருப்புக்கு அருகில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையங்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறும் போத்தல் கள் விற்பனையை முற்றாக தடை செய்யக் கோரியும் கோசங்களை எழுப்பியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.

குறித்த பேரணியானது பிரதான வீதியூடாகச் சென்று மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

பின்னர் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மாந்தை மேற்கு பிரதேச செயலக நிர்வாக அலுவலகர் எம்.ஆர்.எம்.கஜீத்திடம் கையளித்தனர்.

குறித்த பேரணியில் பாப்பாமோட்டை மற்றும் ஆக்காட்டிவெளி கிராம மக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (7)




## பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்





(பனிக்கன்குளம்)

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை வசதியற்ற மாணவர்கள் 21 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா வர்த்தகர்கள் நலன்புரிச்சங்கத்தினால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், வர்த்தகர்கள், நலன்புரிச் சங்கத்தலைவர் எஸ்.சிறிஸ்கந்தராஜா, உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (7-281)

## கள்ளிக்குளத்தில் குப்பை கொட்டப்படுவது தொடர்பில் சத்தியலிங்கம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம்

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களினால் சேகரிக்கப்படும் குப்பைகள், கழிவுகள் கடந்த 50 வருடங்களாக பம்பைமடுப் பகுதியில் இதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்டப்பட்டு வருவதாக நம்பப்படுகின்றது. எனினும் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் குப்பைகளை கள்ளிக்குளம் பகுதியில் கொட்டுவதற்கு மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. இதற்கு எதிர்ப்பினை வெளியிட்டுள்ள வடமாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது.

இந்நிலையில் மேற்படி பிரதேசத்திற்கு கடந்த 2013, 2014 ஆம் ஆண்டுகளில் புதிதாக அப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் மேற் கொள்ளப்பட்டு வரும் நிலையில் குப்பைகள் கொட்டும் இடத்தை மாற்றும் விடயங்கள் பற்றிப்பேசப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் குப்பைகள் கொட்டும் இடத்தை ஓமந்தை கள்ளிக்குளம் பகுதிக்கு மாற்றுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

கள்ளிக்குளம் வவுனியாவில் பூர்வீகக்கிராமமாகும். 1977, 1983, 1990 ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இக்கிராமத்திலிருந்து மக்கள் வெளியேறி தற்போது மீண்டும் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் இக்கிராமத்திற்கு குப்பைகள் கொட்டும் இடத்தை மாற்றும் முயற்சியானது ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தங்களின் கவனத்திற்குத் தெரியப்படுத்துவதாக வடமாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தினால் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-250-281)

## தையல் பயிற்சி நெறிகளுக்கான கொடுப்பனவுகள் கடந்த ஐந்து மாதங்களுக்கு வழங்கப்படவில்லை

### பயிற்சிநெறி ஆசிரியர்கள் சிரமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தையல் பயிற்சி நெறிகளுக்கான கொடுப்பனவுகள் கடந்த ஐந்து மாதங்களுக்கு வழங்கப்படாததனால் தையல் பயிற்சியினை வழங்கி வரும் ஆசிரியர்கள்,அது சார்ந்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுரைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் மற்றும் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் பிரதேச செயலகங்களால் தையல் பயிற்சி நெறிகளை ஆரம்பி அதன் ஊடாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக தையல் பயிற்சி நெறிகளை வழங்கி வரும் ஆசியர்களுக்கான கொடுப்பனவுகள், பயிற்சி நிலையங்களுக்கான வாடகைக்கொடுப்பனவுகள், மின்சாரக் கட்டணம், காவலாளிகளுக்கான கொடுப்பனவுகள் என எதுவும் வழங்கப்படாத நிலையில் குறித்த பயிற்சிநெறிகளை, பயிற்சிகளை வழங்கி வருகின்ற ஆசிரியர்கள் மற்றும் அதற்கு பொறுப்பாக இருக்கின்றவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இதற்கான கொடுப்பனவுகளை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-315)

## தொடரும் புதைகுழி அகழ்வுப்பணி



கடந்த மார்ச் மாதம் மன்னார்சதொச விற்பனை நிலைய கட்டுமானப் பணியின்போது மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வின்போது கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்களைத் தொடர்ந்து இது சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இப் பகுதியில் அகழ்வுப் பணி இடம்பெற்று வருகின்றது.

இவ் அகழ்வுப் பணியானது நேற்று முன்தினம் புதன்கிழமை 45 ஆவது தடவையாக இடம்பெற்றது. இப் பணியானது ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டிருந்த மனித எலும்புக் கூடுகள், மண்டையோடுகளை வெளியேற்றும் நோக்குடன் துப்புரவு செய்யும் பணியும் அத்துடன் இவ்விடத்துக்கு அருகாமையிலுள்ள நடைபாதையில் ஐந்து அடி ஆலயத்திற்கு அகழ்வை விரிவுபடுத்திய இடத்திலேயும் அகழ்வு இடம்பெற்றது.

குறித்த வளாகத்தில் இரு வேறு பகுதிகளில் வித்தியாசமான நிலையில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்படி வளாகத்தின் மையப்பகுதியில் எந்தவித குழப்பமும் இன்றி ஒழுங்கான நிலையில் புதைக்கப்பட்ட மனித எச்சங்கள் சிலவும் அதேநேரத்தில் வளாகத்தின் நுழைவுப் பகுதியில் ஒன்றுடன் ஒன்று செருகிய விதமாகவும் அவசர அவசரமாக புதைக்கபட்ட விதத்திலும் மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. தற்போது மையப்பகுதியில் காணப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படவில்லை எனவும் வளாகத்தின் நுழைவுப் பகுதிகளில் உள்ள மனித எச்சங்கள் தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் 62 இற்கு மேற்பட்ட எலும்புக்கூடுகளும் மண்டையோடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் 54 எலும்புக்கூடுகளும் மண்டையோடுகளும் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (7)

## பொதுநோக்கு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவம்





வவுனியா நாகர் இலுப்பைக்குளம் வீட்டுத்திட்டம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் பொது நோக்கு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா நாகர் இலுப்பைக்குளம் வீட்டுத்திட்டப்பகுதியில் 15 இலட்சம் ரூபா பெறுமதியில் வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வு பிரதி அமைச்சர் கே. காதர் மஸ்தானின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து பிரதி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் து.சுதாகர் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாகர் இலுப்பைக்குளம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் எம். முரளி, கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (7)

# கலைஞர் கருணாநிதியின் உடல் நிலை எப்படியிருக்கிறது

## நேரடி ரிப்போட்

செப்டெம்பர் 2016 இற்கு முன்புவரை தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு மிகப் பெரிய உடல்நலப் பாதிப்புகள் எதுவுமில்லை. 2000 ஆம் ஆண்டு மே மாதத்தில் முதுகு வலிக்காகவும், 2008 மே மாதத்தில் கழுத்து வலிக்காகவும் ஓரிரு நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டார். மற்றபடி, உடல்நிலை சரியில்லையென்று அவர் படுத்ததில்லை. உடல் எடையைத் தாங்கும் சக்தி கால்களுக்கு இல்லாமல் போனதால், சில ஆண்டுகளுக்கு முன்பு சக்கர நாற்காலிக்கு மாறினார் கருணாநிதி. அதற்குப் பிறகான பாதிப்புகள்தான், அவரை முழுவதுமாக முடக்கிப்போட்டன. அன்றிலிருந்து இன்று வரை அந்தப் பாதிப்புகளிலிருந்து மீளமுடியாமல் அவர் தவிக்கிறார்.

2016 செப்டெம்பரில் முதல்முறையாக நெஞ்சு சளி காரணமாக மூச்சுத் திணறல் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் கருணாநிதி. அந்தப் பிரச்சினைக்காக எடுத்துக்கொண்ட மருந்துகளின் பக்கவிளைவாக, அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் புதிய பிரச்சினை ஒன்று உருவெடுத்தது. எடுத்துக்கொண்ட மருந்தில் ஒன்று ஒத்துக்கொள்ளாமல் போகவே, ஒவ்வாமை ஏற்பட்டது. நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து அவரின் உடல் முழுவதும் ஒவ்வாமை, கொப்புளங்கள் வந்தன. மருத்துவர் கோபால் தலைமையிலான மருத்துவக் குழு அவரைக்கவனித்துக்கொண்டாலும், கொப்புளப் பிரச்சினைக்குத் தோல் மருத்துவர் இயேசுதாசன் சிகிச்சை வழங்கினார். அதன்பின் முழுமையாக ஓய்வெடுக்க வைத்தியர்கள் அறிவுறுத்தினர். இந்தக் கொப்புளங்களின் ரணம் வாட்ட, இரவு நேரத்தில் தூங்க முடியா மல் அவதிப்பட்டார் கருணா நிதி. படுக்கையில் மாற்றங் கள் செய்தும் அவருக்கு அதே பிரச்சினைகள் தொடர, டிசெம்பர் முதலாம் திகதி மீண்டும் காவேரி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். ஒரே வாரத்தில் அந்தப் பிரச்சினைகள் சரியாகிவிட, வீடு திரும்பினார் கருணாநிதி.

மீண்டும் ஒரு வாரத்தில் அவருக்குச் சுவாசக் கோளா




றும் நுரையீரல் தொற்றும் ஏற்பட்டன. அப்போதுதான், அவருக்கு முதல்முறையாக ட்ரக்கியோஸ்டமி ட்யூப் பொருத்தும் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது.

இயற்கையாகச் சுவாசிக்க முடியாத நேரத்தில், வாய் மற்றும் மூக்கின் உதவியின்றி நேரடியாக நுரையீரலுக்கு ஒட்சிசனைக் கொண்டு செல்லும் கருவிதான் ட்ரக்கியோஸ்டமி. தொண்டையில் துளையிட்டு இதைப் பொருத்துவார்கள். காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் மோகன்காமேஸ்வரன்இதைப் பொருத்தினார். அறுவைச் சிகிச்சை முடிந்து ஒரு வாரத்தில் வீடு திரும்பினார் கருணாநிதி. அதற்குப் பிறகு எட்டு மாதங்கள் வீட்டிலேயே ஓய்வெடுத்தார். தேவையான போது வைத்தியர்கள் வந்து சிகிச்சையளித்தனர். கடந்த ஒரு வருடமாகப் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை அவர் தவிர்த்து வந்தார்.

2017 ஒகஸ்ட் மாதத்தில் மீண்டும் காவேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார் கருணாநிதி. ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த ட்ரக்கியோஸ்டமி ட்யூப் அகற்றப்பட்டு இரண்டாவது முறையாகப் புதிய ட்யூப் பொருத்தப்பட்டது. 2018 ஜனவரியில் ஒருமுறை பல் சிகிச்சைக்காக காவேரி வைத்தியசாலை அழைத்துச்செல்லப்பட்டார். 2018 பெப்ரவரி 15 ஆம் திகதி அவருக்கு மூன்றாவது முறையாக ட்ரக்கியோஸ்டமி ட்யூப் மாற்றப்பட்டது.

இதற்கிடையே தொண்டையில் ட்ரக்கியோஸ்டமி ட்யூப் இருப்பதால், உணவு எடுத்துக்கொள்வதும் பிரச்சினையானது. அதனால், வயிற்றில் துளையிட்டு பெக் ட்யூப் (Percutaneous endoscopic gastrostomy -PEG) வழியாக அவருக்கு உணவளித்து வந்தார்கள். வயிறு இரைப்பை நிபுணர் டாக்டர் கே.ஆர். பழனிசாமி இதற்காகச் சிகிச்சை தந்தார்.

இந்நிலையில், கருணாநிதிக்கு ஜுலை 18ஆம் திகதி நான்காவது முறையாக காவேரி வைத்திய சாலையில் ட்ரக்கியோஸ்டமி கருவி மாற்றம் செய்யப்பட்டது. அன்றிரவே வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார் அவர். வீட்டுக்கு வந்ததிலிருந்தே சிறுநீரகப் பாதையில் நோய்த்தொற்று ஏற்பட்டது. இதனால் எழுந்த காய்ச்சல் அவரை வாட்டியெடுத்தது. அவரின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துவிட்டதாகவும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித் தன. இந்தமுறை அவரை வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லாமல், காவேரி வைத்தியசாலை வைத்தியர்கள் வீட்டுக்கே வந்து சிகிச்சை தந்தனர். இந்தநிலையில், திடீரென அவருக்கு இரத்த அழுத்தம்குறையவே, ஜுலை 28 ஆம் திகதி அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அதிகாலை 1.30 மணிக்கு காவேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் கருணாநிதி. அம்புலன்ஸில் அவர் அழைத்துச் செல்லப்பட்டது இதுவே முதல் முறை. காவேரி வைத்திய சாலையின் நான்காவது மாடியில், ஐ.சி.யூவில் வைத்து அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.



கருணாநிதிக்குச் சிகிச்சையளித்து வரும் காவேரி வைத்தியசாலையின் வைத்தியர் குழுவில் இருக்கும் மூத்த டாக்டர் கூறும் போது, "இம்முறை ட்ரக்கியோஸ்டமி ட்யூப் மாற்றப்பட்ட பிறகு அவருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டது. வயது அதிகம் என்பதால் உடல் நலிவுற்று, உடலில் சோடியம், பொட்டாசியம் அளவு குறைந்துள்ளது. அதற்காகத்தான் வீட்டிலேயே சிகிச்சையளிக்கப்பட்டது. மனித உடலின் முக்கிய உறுப்புகளாகக் கருதப்படுவது மூளை, இதயம், சிறுநீரகம், கல்லீரல் மற்றும் நுரையீரல் ஆகியவைதான். இவை அனைத்தும் அவருக்கு நன்றாக இயங்குகின்றன. இவற்றில் எந்த பாதிப்புகளும் இல்லை.

அதற்குக் காரணம் அவர் தொடர்ச்சியாகச் செய்து வந்த நடைப்பயிற்சியும் யோகாப் பயிற்சியும் தான். உடல்நலக் கோளாறு என்பது அவருக்குப் பெரிய அளவில் இல்லை.

ஆனாலும், முதுமையின் பாதிப்புகள் தவிர்க்க முடியாதவை. அவருக்கு அளிக்கப்படும் ஆன்டி பயாடிக் மருந்துகளை, தேவைக்கு ஏற்றபடி மாற் றித் தருகிறோம். இதில் நல்ல பலன் தெரிய ஆரம் பித்தது" என்கிறார் அவர்.

**ஜுனியர் விகடன்**



யாழ். வலிதூண்டல் றோ.க.த.க.பாடசாலை தினம் கடந்த 30 ஆம் திகதி பாடசாலை அதிபர் சின்னத்துரை கணேசராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிதூண்டல் பங்குத்தந்தை அருட்பணி தினேஸ்கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக இளவாலை மெய் கண்டான் கலவன் பாடசாலை அதிபர் கணேசாநந்தன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள்இடம்பெற்றன.
(படங்கள்:- இளவாலை செய்தியாளர்)

## பிரதி அதிபரின் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி நகுலேஸ்வரி சண்முகநாதனின் மணிவிழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நலன்புரிக் கழகத் தலைவர் செ.ஜெயகாந்தன் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறும். இதில் ஆசியுரையினை பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் குரு சிவஸ்ரீ ஜோ.பிரசன்னா குருக்கள் வழங்குவார். (இ-7)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்

### ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:-14
ஆதன இல:-236
வீதி:-சென்.ஹென்றீஸ் வீதி
கிராம சேவையாளர் பிரிவு:- J/154



எமது இடாப்பில் வட்டாரம் 14, சென்.ஹென்றீஸ் வீதி, ஆதன இல. 236 இல் C.பொன்னையா எனும் பெயரில் இவ் ஆதனம் அமைந்துள் ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு தற்போது தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரியவிளான் இறை "கோணாவளை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 3 குளி 8.6 கொண்ட இவ்வாதனம் ஐக்கிய இராச்சியம் தேவரத்தினம் பொன்னையா (அற்றோனித்தத்துவகாரர் மாரீசன்கூடல் பேரின்பநாதன் பொன்னையா மூலம்) ஆகிய இவர்களால் மாரீசன்கூடல் கந்தையா அருந்தவராசா பெண் தவராணி ஆகிய இவருக்கு திரு.இ.த.அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6549ம் இலக்க 02.12.2017ம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.தருமராசா அவர்களால் வரையப்பட்ட 282ம் இலக்க 29.08.1979ம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ்வாதன மானது "கோணாவளை" நிலப்பரப்பு 3 குளி 8.6 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப் பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா அருந்தவராசா பெண் தவராணி எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என் பதையும் அறியத் தருகிறேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

திரு.அ.ஜெபநேசன், தவிசாளர்
வலி.தென்மேற்கு பிரதேச சபை. (5239)

# ஐ.தே.கவுடன் உறவாடும் சு.கவுடனான உறவை முறிக்க வேண்டிய நிலையில் சுசில்

## மகிந்தவுடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்க்க திட்டம்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவாடும் சுதந்திரக் கட்சியுடன் பயணிக்க முடியாதுள்ளது, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடனான உறவையும் முறிக்க வேண்டிய நிலையில் இன்று அவர்கள் செயற்படுகின்றனர் என பொது எதிரணி உறுப்பினராக அடையாளப்படுத்தும் சுயாதீன அணியின் உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.**



மகிந்த யாரை எதிர்க்கட்சி தலைவராக்குகின்றாரோ அவருடன் இணைந்து ஆட்சியை வீழ்த்தும் முயற்சிகளை முன்னெடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

பொது எதிரணியின் செயற்பாடுகள் மற்றும் எதிர்க்கட்சியாக செயற்படும் முயற்சிகள் குறித்து வினவிய போதே . அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாக நாம் இணைந்து தனி அரசாங்கத்தை அமைக்க வேண்டும்என கடந்த மூன்று ஆண்டுகளாக முயற்சிகளை எடுத்தோம்.

எனினும் கடந்த மூன்று ஆண்டுகளில் 16 பேரை மாத்திரமே எம்முடன் இணைக்க முடிந்துள்ளது. இப்போதுள்ள நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் இடையில் விரிசல் நிலைமையே ஏற்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் இனி மேலும் எம்முடன் இணைவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

ஆகவே அவர்களுக்கு இனியும் நிலைமைகளை எடுத்துரைக்க முடியாது என்பதே எமது நிலைப்பாடு. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்கும் வரையில் எம்மால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாக பயணிக்க முடியாது.

நாம் 70 பேர் கொண்ட பலமான சக்தியாக உள்ளோம். இந்த அரசாங்கம் கலையும் வரையில் நாம் எதிர்க்கட்சியாக செயற்பட தீர்மானம் எடுத்துள்ளோம்.

அதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். சபாநாயகரை சந்தித்து எமது நியாயங்களை எடுத்துரைத்து எழுத்து மூல கோரிக்கையையும் முன்வைத்துள்ளோம்.

அடுத்த பாராளுமன்ற அமர்வுகளின் போது எமது கோரிக்கைக்கான பதிலை சபாநாயகர் முன்வைப்பார். எவ்வாறு இருப்பினும் எமது 70 பேர் கொண்ட அணியே எதிர்க்கட்சியாக செயற்படும். எம்மில் யார் எதிர்க்கட்சி தலைவர் என்பதையும் மகிந்த ராஜபக்ஷ தீர்மானிப்பார். அவர் யாரை எதிர்க்கட்சி தலைவராக நியமிக்கின்றாரோ அவரையே நாமும் ஏற்றுக்கொள்வோம்.

நாம் அனைவரும் பொதுவான நோக்கத்தில் அரசியல் அணியாக ஒன்றிணைந்துள்ள நிலையில் எமக்குள் அதிகார போட்டி இல்லை. அனைவரும் இணைந்து அடுத்து அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே உள்ளது. மீண்டும் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை வீழ்த்த வேண்டும். அதற்காக எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் அனைவருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

அதே போல் எமது அணியினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒட்டிக்கொண்டு அரசியல் 'செய்ய நினைத்தால் அதன் பின்னர் அவர்களுக்கும் அரசியல் வாழ்க்கை இல்லாது போய்விடும்.

மக்கள் நிலைப்பாடு என்ன என்பதை உணர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் செயற்பட வேண்டும். மகிந்த ராஜபக்ஷவுடன் மட்டுமே எமது பயணம் அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்.நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் உயர்தர மாணவர்களுக்கு மது, போதைப் பொருள் குறித்து இருநாள் விழிப்பு ணர்வு கருத்தரங்கு தேசிய சமூக அபிவிருத்தி கல்லூரியின் சமூக சேவை இறுதியாண்டு மாணவன் கிஜிதரனின் ஏற்பாட்டில் ஹேஸ்தி லங்கா அனுசரணையுடன் நேற்று நடைபெற்றது.

# அதிகாரங்களை சரியாகப் பயன்படுத்துவதனூடாகவே திட்டங்களை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியும்

## முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

சபையின் அதிகாரங்களை சரியாக பயன்படுத்துவதனூடாகவே மக்கள் நலன் சார் திட்டங்களை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.மாறாக அதிகாரிகளை நம்பியிருந்தால் மக்களுக்கான செயற்றிட்டங்கள் தாமதமாகும் நிலையிலேயே சென்று கொண்டிருக்கும் நிலை உருவாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாநகரசபை முன்னாள் முதல்வரும் உறுப்பினருமான யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.



யாழ்.மாநகர சபையின் அமர்வு கடந்த 31 ஆம் திகதி சபையின் முதல்வர் தலைமையில் நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது யாழ்.மாநகர சபையின் செயற்பாடுகள் துரிதமாக நடைபெறவேண்டுமானால் அதிகாரிகள் இம் மாநகரின் அதிகாரங்கள் சரியான முறையில் பிரயோகிக்கப்பட வேண்டும்.

அதிகாரிகள் ஒவ்வொரு செயற்றிட்டங்களையும் முன்னெடுக்கும் போது தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப செயற்படவே செய்வார்கள். ஆனால் நாம் அவ்வாறு இருந்து விடமுடியாது இந்த சபைக்குரிய அதிகாரங்களை சரியான முறையில் பிரயோகித்து தடைப்பட்டுப்போகும் செயற்றிட்டங்களை எல்லாம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே நாம் மக்களுக்காக சேவையாற்றுவதற்காகவே மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் மக்களின் நலன்கள் பாதிக்காத வகையில் அனைத்து செயற்பாடுகளையும் துரிதமாக முன்னெடுக்க உழைக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# தேனீ வளர்ப்பு தொழிற்றுறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

இலாபகரமான தொழிற்றுறையாக கருதப்படும் தேனீ வளர்ப்பை மேம்படுத்துவதற்காக பாரிய வளத்தை இலங்கை கொண்டுள்ளபோதிலும் தேனீ வளர்ப்பு தொடர்பாக விஞ்ஞான அறிவு இல்லாததனால் தற்பொழுது இலங்கையில் தேனீ வளர்ப்பு தொழிற்றுறை அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் தேனீ வளர்ப்பு தொழிற்றுறை குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. அத்தோடு உள்ளூர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக தேன் இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்த விடயங்களை கவனத்திற் கொண்டு தேனீ வளர்ப்பு தொழிற்றுறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக இரண்டு இலட்சம் தேனீ அலகுகளை முதல் கட்டத்தின் கீழ் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் கீழ் 1,000 விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு இவர்களுக்கு தேனீ வளர்ப்புக்கான பெட்டிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தேனீ வளர்ப்பு தொழிற்றுறையை மேலும் விரிவுபடுத்துவதற்காக சுமார் 2 இலட்சம் பேருக்கு புதிய தொழில்வாய்ப்புக்கள் ஏற்படுத்துவதற்கும் வருமான வழிகளை ஏற்படுத்தும் நோக்கிலும் நவீன பயிற்சி மற்றும் ஆய்வு மத்திய நிலையம் தம்பேதென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்காக சமூக சேமநல மற்றும் ஆரம்ப கைத்தொழிற்துறை அமைச்சர் தயா கமகே சமர்ப்பித்த பரிந்துரையுடன் இதற்கான திட்டத்தை விவசாய அமைச்சினதும் சமூக சேமநல மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் கூட்டுத் திட்டமாக நடைமுறைபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# 2 வயதுச் சிறுமிக்கு எமனான காட்டுப்பன்றி

(கொழும்பு)

கம்பளையில் இரண்டு வயதுடைய சிறுமி ஒருவர் திடீர் சுகவீனத்தால் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகல்ல, கூறுகல கிராமத்தை சேர்ந்த ரசிகா ரஷ்மி வீரசேன என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளாள்.

கடந்த 31ஆம் திகதி இரவு உணவுக்காக காட்டுப் பன்றி உட்கொண்டமையினால் சிறுமி சுகயீனமடைந்துள்ளார்.

பின்னர் நேற்று முன்தினம் காலை சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்த போது உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.


தற்போது சிறுமியின் சடலம் கம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 31ஆம் திகதி அந்தப் பகுதி மக்கள் இரவு உணவிற்காக காட்டுப் பன்றியை சமைத்ததாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிறுவர்களுக்கு இவ்வாறான கடினமான உணவுகளை கொடுப்பதை தவிர்க்குமாறு பெற்றோருக்கு, பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (இ-7)

## பாரதம்

# வெள்ளக்காடானது உ.பி. உயிரிழப்பு 100ஐ தாண்டியது





(லக்னோ)

உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக பெய்த கன மழையில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 100 ஐ தாண்டியது.

பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் உத் தரப்பிரதேசம் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

குறிப்பாக, மதுரா, ஆக்ரா, மீரட், முசாபர்நகர், காசியாபாத், ஜான்சி உட்பட பல்வேறு நகரங்களில் பெய்த மழையால் வெள்ளக் காடானது.

வெள்ளத்தில் சிக்கிய வீடுகள் இடிந்தும், இடி, மின்னல் தாக்கியும் பலியானோர் எண்ணிக்கை 106 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 150க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். 1100க்கு மேற்பட்ட வீடுகள் பெருத்த சேதமடைந்தன.

மழையில் சிக்கி பலியானோர் குடும்பத்துக்கு முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலா ரூபாய் 4 இலட்சம் வழங்கப்படும்எனவும்சேதமடைந்த வீடுகளை சீரமைக்க தேவையான நிதியுதவியளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்துக்குள் உத்தரப்பிரதேசம் மாநிலத்தின் கிழக்கு பகுதியில் கன மழை பெய்யும்என வானிலை மையம் அறிவித்துள்ளது. (இ-7)

# கருணாநிதி உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் - ஜி.கே.



(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு கொடுக்கப்படும் சிகிச்சையால் அவரது உடல் நிலை நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்ததாக ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

காவேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கருணாநிதியின் உடல் நலம் பற்றி விசாரிப்பதற்காக த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன்நேற்றுமுன்தினம்வைத்தியசாலைக்குச் சென்றார்.

வைத்தியசாலைக்குச் சென்று கருணாநிதி உடல் நலம் குறித்து ஜி.கே.வாசன் விசாரித்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

கருணாநிதியின் உடல் நலம் குறித்து குடும்ப உறுப்பினர்களையும், மூத்த தலைவர்களையும் சந்தித்து விசாரித்தேன். கலைஞருக்கு கொடுக்கப்படும் சிகிச்சையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக கூறினார்கள்.

அவருக்கு அளிக்கப்படும் தீவிர சிகிச்சையின் அடிப்படையில் பழையபடி ஆரோக்கியமான நிலைக்கு திரும்புவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இது உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு கிடைத்த நல்ல செய்தியாகும். அவர் பூரண நலத்துடன் இல்லம் திரும்ப இறைவனை வேண்டுகிறேன் எனத் தெரிவித்தார். (இ-7)

# நாற்காலியில் அமர்ந்தார் கருணாநிதி

(சென்னை)

காவேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதால் அவர் நாற்காலில் அமர வைக்கப்பட்டார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு கடந்த 27 ஆம் திகதி உடல் நலக்குறைவு ஏற்பட்டு நள்ளிரவு 1.30 மணிக்கு காவேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியர்களின் தீவிர சிகிச்சைக்குப்பின் உடல் நிலை தேறிவருகிறது. அரசியல் கட்சி தலைவர்கள் வைத்தியசாலைக்குச் சென்று கருணாநிதி உடல் நிலை பற்றி விசாரித்து வருகிறார்கள்.

அவரது உடல்நிலை பற்றி கவலையடைந்த தொண்டர்கள் வைத்தியசாலை முன் 5 நாட்களாக விடிய விடிய காத்து கிடந்தனர்.



துணை ஜனாதிபதி வெங்கையாநாயுடு, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் கருணாநிதியை பார்த்த படங்கள் வெளியிடப்பட்ட பின்புதான் தொண்டர்கள் நிம்மதி அடைந்தனர்.

ராகுல் காந்தி கருணாநிதியை பார்க்க வந்த போது அவரது காதில் மு.க.ஸ்டாலின் ராகுல் வந்திருக்கும்தகவலை சொல்வதும் கருணாநிதி கண் திறந்து பார்க்கும் காட்சியும் தொண்டர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

தற்போது கருணாநிதியின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் இருப்பதாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு கருணாநிதி உடல் நிலையில் மேலும் முன்னேற்றமாக அவர் நாற்காலியில் அமர வைக்கப்பட்டார். முதலில் வைத்தியர்கள் அவரை படுக்கையில் சிறிது நேரம் அமரவைத்தனர். அதன் பிறகு அருகில் இருந்த நாற்காலியில் அமரவைத்து சிறிது நேரம் பயிற்சியளித்தனர்.

கருணாநிதி உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. அவரை சிறிது நேரம் நாற்காலியில் அமர வைத்து பயிற்சி அளித்தனர். மருந்துகளை ஏற்றுக் கொண்டு உடல் நிலை ஒத்துழைப்பு அளிக்கிறது என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

கருணாநிதி செயற்கை சுவாசம் இல்லாமல் தானாகவே சுவாசிக்கிறார். தேவைப்படும்போது மட்டுமே செயற்கை சுவாசம் அளிக்கப்படுகிறது. திரவ உணவு குழாய் வழியாக செலுத்தப்படுகிறது என்றும் தெரிவித்தனர். (இ-7)

# சிம்பாவேயில்

# ஆர்ப்பாட்டம் க

## இராணுவத்தின் துப்

(ஹராரே)

சிம்பர்வேயில் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் கலவர மாக மாறியதைத் தொடர்ந்து, இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

சிம்பாவே தேர்தலை ஆளுங்கட்சி முறைகேடாக பயன்படுத்திக் கொண்டதாக தெரிவித்து, எதிர்க்கட்சியினர் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை தலைநகர் ஹராரேயில் பாரிய போராட்டங்களை முன்னெடுத்தனர். இதன்போது ரயர்களை எரித்து வீதிகளை மறித்து கோஷங்களை எழுப்பினர்.



ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸார் தண்ணீர் மற்றும் கண்ணீர்ப் புகையை பிரயோகித்தனர். இதன் போது பொலிஸாருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மோதலில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் அவ்விடத்திற்கு விரைந்துள்ளனர். இதன்

# அவநம்பிக்கை


# சிம்பாவே ஜன

## ஐரோப்பிய ஒன்

(ஹராரே)

சிம்பாவே தேர்தலில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஊடகங்களின் மாறுபட்ட நிலைப்பாடு, வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் தேர்தல் ஆணையகத்தின் மீதான அவநம்பிக்கை என பல குளறுபடிகள் நிறைந்து காணப்பட்டதாக குறித்த குழுவின் தலைமை கண்காணிப்பாளர் எல்மர் புரோக் சுட்டிக்காட்டியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் முடிவுகளை பொறுத்தவரையில்



நம்பகத் தன்மை என்பது மிகவும் முக்கியமானது. தேர்தல் தினத்தன்று எந்தவித வன்முறைகளும் இடம்பெறவில்லை. எனினும், பல வாக்குச சாவடிகளுக்கு வெளியில் வாக்காளர்கள்

# கருணாநிதி பிற

(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி பிறவியிலேயே போராளியென கேரளா முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

## கேரள முதல்வ

காவேரி வைத்தியசாலைக்கு நேற்று வியாழக்கி ழமை நேரில் சென்று கரு ணாநிதியை பார்வையிட்ட கேரளா முதல்வர் பினராயி

# வெளிநாடு

## ல் எதிர்க்கட்சியினரின்
## கலவரமாக மாறியது
### துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி



போது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இராணுவத்தின் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர். சம்பவத்தின் போது ஹராரே வான்பரப்பில் சிம்பாவே இராணுவத்தின் ஹெலிகொப்டரும் பறந்த வண்ண மிருந்துள்ளது.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியமைக்கு எதிர்க்கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இராணுவம் தமது எல்லையை மீறி செயற்படுவதாக எதிர்க் கட்சித் தலைவர் நெல்சன் சமிஸா சாடியுள்ளார்.

சுதந்திர சிம்பாவேயில் முகாபேயிற்கு அடுத்த ஜனாதிபதியை தெரிவுசெய்யும் ஜனநாயக வாக்கெடுப்பு கடந்த திங்கட்கிழமை மிகவும் சுமுகமாக இடம்பெற்றது.

இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தற்போதைய ஜனாதிபதி எமர்சனே வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று தொகுதிகளுக்கான தேர்தல் இன்னும் வெளியாக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜானு - பி.எப்.கட்சி அமோக வெற்றி
## சிம்பாவேயில் மீண்டும் எமர்சன் ஆட்சி

(ஹராரே)

முன்னாள் ஜனாதிபதி ராபர்ட் முகாபேவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நடந்த சிம்பாவே தேர்தலில் ஆளுங்கட்சியான ஜானு-பி.எப். கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஆபிரிக்க நாடான சிம்பாவேயில் 37 ஆண்டுகள் ஆட்சி நடத்திய ராபர்ட் முகாபேவுக்கு எதிராக கடந்த ஆண்டு புரட்சி வெடித்தது.

இதனால், முகாபேவின் பதவி பறிக்கப்படுகிற நிலை உருவானது. இதையடுத்து, தாமாக முன்வந்து சென்ற நவம்பர் மாத இறுதியில் அவர் பதவி விலகினார்.

முகாபேயின் பதவி விலகலைத் தொடர்ந்து எமர்சன் நங்காக்வா ஜனாதிபதியானார். அந்நாட்டில் மொத்தம் உள்ள இடங்கள் 270 என்றாலும் 210 இடங்களுக்குத்தான் நேரடி தேர்தல் நடத்தப்படும். மீதி இருக்கும் 60 இடங்களுக்கு விகிதாசார அடிப்படையில் எம்.பி.க்கள் தேர்ந்



தெடுக்கப்படுவார்கள். சிம்பாவேயில் முதன்முறையாக கடந்த 30 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில், வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு நடைபெற்ற வன்முறையினால் 24 மணி நேர தாமதத்திற்கு பிறகு பலத்த பாதுகாப்புகளுடன் நாடாளுமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன.

இதில், ஜனாதிபதி எமர்சன் நங்காக்வாவின் ஆளும் ஜானு-பி.எப். கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளில் 145 இடங்களில் அந்த கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இதனால், ஜானு-பி.எப். கட்சி மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை பெற்று தனிப் பெரும் கட்சியாக விளங்குகிறது. இதனால் அந்நாட்டின் அரசியல் அமைப்பு சட்டத்தையும்திருத்தும்வல்லமை, ஜானு-பி.எப். கட்சிக்கு வாய்த்துள்ளது.

இன்னும் முடிவு அறிவிக்கப்படாமல் 3 இடங்கள் உள்ளன. நெல்சன் சாமிசா தலைமையிலான எதிர்க்கட்சியான எம்.டி.சி. 60 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. என்பிஎப் கட்சி ஒரு இடத்திலும், சுயேட்சை வேட்பாளர் ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆளுங்கட்சி கிராமப்புறங்களிலும், எதிர்க்கட்சி நகர்ப்புறங்களிலும் வெற்றி வாகை சூடியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐ.எஸ்.பயங்கரவாதிகள் 150 பேர் ஆப்கானில் சரண்

(காபூல்)

150 இற்கும் மேற்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள், ஆப்கானிஸ்தான் படைகளிடம் சரணடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு படைகளுக்கும், தலிபான்களுக்கும் இடையே நடந்து வரும் உள்நாட்டுப் போரை பயன்படுத்தி ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினர் அங்கு கால் பதித்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். ஆனால் அவர்களுக்கும் தலிபான்களுக்கும்இடையே மோதல்கள் நடந்து வந்தன.

குறிப்பாக ஆப்கானிஸ்தானின் வடக்கு மாகாணமான ஜோஸ்ஜான் மாகாணத்தில் இரு தரப்பினருக்கும்இடையே கடும் சண்டை நடந்து வந்தது. இன்னொரு பக்கம் ஆப்



கானிஸ்தான் மற்றும் அமெரிக்கப் படைகளிடம் இருந்தும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு அழுத்தம் வந்தது. இந்த நிலையில் அங்கு 150இற்கும் மேற்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள், ஆப்கானிஸ்தான் படைகளிடம் சரண டைந்தனர். இதுபற்றி வட பகுதி இராணுவ தளபதி முக மதுஹனிப் ரெஸாயீ தெரிவிக்கையில், "கடந்த காலத்திலும் இப்படி ஐ.எஸ். பயங்கரவாதிகள் சரணடைந்ததுண்டு.

ஆனால் இந்த முறை அதன் தலைவர்களில் ஒருவரும், துணைத் தலைவரும் 150 இற்கும் மேற்பட்டோருடன் சரண டைந்திருப்பது குறிப்பிடத்தக் கது" என்றார்.

இதன்மூலம் வட பகுதியில் ஐ.எஸ் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் முடிவுக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## கயை ஏற்படுத்தியுள்ள
## னாதிபதித் தேர்தல்
### ஒன்றியம் கண்டனம்



பலர் அச்சுறுத்தப்பட்டனர். ஆளுங்கட்சியினராலேயே இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மிகவும் மோசமான சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. வாக்குச்சீட்டுகளின் மாதிரிகள் அச்சிடப்பட்டன. வாக்காளர்களை சிலர் கட்டுப்படுத்தி வந்தனர். ஊடகங்களும் தமது பங்கை சரியாக செய்யவில்லை. ஆளுங்கட்சிக்கு சார்பாகவே அரச ஊடகங்கள் செயற்பட்டன. தேர்தல் முடிவை வெளியிடுவதற்கு தேர்தல் ஆணையகம் தாமதித்தது. இதற்கான காரணம் குறித்து கேள்வியெழுப்ப வேண்டியுள்ளது.

இந் நிலையில், தேர்தல் முடிவு எவ்வாறான நம்பகத் தன்மையை ஏற்படுத்துமென கூற முடியாது" என்றார்.

சிம்பாவே தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் கடந்த 2002ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதல் தடவையாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் பணியாற்றியுள்ளனர்.

சர்வதேச முதலீடுகள் மற்றும் பொருளாதாரத்தில் பின்னடைவை சந்தித்துள்ள சிம்பாவேயிற்கு, இத்தேர்தலின் ஊடாக அதற்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் காணப்பட்டது. எனினும், தற்போதைய சூழ்நிலை இதற்கு வழிவகுக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (7)

## றவியிலேயே போராளி
### வர் நெகிழ்ச்சி

விஜயன், ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோதே மேற்படி தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

கருணாநிதி மிகுந்த மன உறுதியுடையவர். அவர் பிறவியிலேயே போராளி. அவர் உடல்நலம் தேற இறை வனை பிரார்த்திக்கின்றேன் எனக் கூறினார்.

மேலும் தி.மு.க. தலைவரின் உடல் நலம் தொடர்பில், மு.க. ஸ்டாலின் மற்றும் கனிமொழியிடம் தான் கேட்டறிந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## கூடுதல் வரி விதித்தால் தக்க பதிலடி தருவோம்
### அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை

(பீஜிங்)

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக வரி விதிக்கும் முடிவை ட்ரம்ப் அரசு அமுல்படுத்தினால் அதற்கு தக்க பதிலடி தருவோம் என சீன அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உலோகங்கள் உள்ளிட்ட உலக நாடுகளின் பொருட்களுக்கான வரியை பன்மடங்காக உயர்த்தியது. இதன் காரணமாக உலக வர்த்தகம் சீர்குலையக் கூடும் என பொருளாதார நிபுணர்கள் அச்சம் தெரிவித்தனர்.

மேலும், வட அமெரிக்காவின் தாராளமய வர்த்தக கொள்கை உடன்பாட்டில் இருந்து வெளியேறப்போவதாகவும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதனால், அண்மையில் கனடாவில் நடைபெற்ற ஜி-7 உச்சி மாநாட்டில் இதர நாட்டு தலைவர்களுடன் ட்ரம்புக்கு கருத்து மோதல் ஏற்பட்டு, அந்த மாநாட்டின் பாதியில் இருந்து ட்ரம்ப் வெளியேறும் நிலை ஏற்பட்டது.

இதற்கிடையில், "அமெரிக்க அரசு சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சுமார் 5 ஆயிரம் கோடி டொலர்கள் மதிப்பிலான சுமார் 800 பொருட்களுக்கு அண்மையில் கூடுதல் வரி விதித்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசு, சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் 200 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்க முடிவு செய்துள்ளது.

இதற்கிடையே, சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பு அதிகாரி கெங் ஷுவாங் தெரிவிக்கையில், சீனாவின் சட்ட அடிப்படையிலான உரிமைகள் மற்றும் பலன்களை காக்க நிச்சயம் அமெரிக்காவிற்கு பதிலடி தரப்படும் எனத் தெரிவித்தார். எனினும், பதிலடி என்பதற்கு எந்த மாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது பற்றிய விபரங்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயர்தரப் பரீட்சை நிலையங்களில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி சேவை

## கல்வித்துறை தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

**உயர்தரப் பரீட்சை நிலையங்களுக்கு, மேலதிகமாக ஒரு நிலையப் பொறுப்பதிகாரியாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவரை சேவையில் அமர்த்த பரீட்சைகள் திணைக்களம் முன்னெடுத்துள்ள தீர்மானத்துக்கு கல்வித்துறையிலுள்ள சகல தொழிற்சங்கங்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.**

கல்வித் துறையில் அதிகாரிகள் தேவையான அளவு காணப்படும் நிலையில் மேலதிக நிலையப் பொறுப்பதிகாரியாக இராணுவ வீரர் ஒருவரை நியமிப்பதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மேலதிக நிலையப் பொறுப்பதிகாரிகளாக தற்பொழுது நியமனம் செய்யப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் நிலையப் பொறுப்பதிகாரிளுக்கு உத்தரவுகளை தற்பொழுதே இட ஆரம்பித்துள்ளதாக நிலையப் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளவர்களிடமிருந்து விசனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அச்சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் 13 தொழிற்சங்கங்கள் இணைந்து பரீட்சைகள் ஆணையாளருடன் கலந் துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து தொழிற்சங்கங்களினதும் வேண்டுகோளின் பேரில் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு 2268 மேலதிக நிலையப் பொறுப்பதிகாரிகளை நியமிக்க பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பௌத்த மதத்தைப் பாதுகாப்போம் கபீர் மகாநாயக்கர்களிடம் உறுதி

(கொழும்பு)

பௌத்த மதத்துக்கு அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள மகத்துவத்தை நீக்குவதற்கோ, நாட்டைத் துண்டாடுவதற்கோ ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென பெருந்தெருக்கள் அமைச்சர் கபீர் ஹாசிம் மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்கர்களிடம் தெரிவித்துள்ளார்.

கண்டியிலுள்ள மல்வத்து பீடம் மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களை அமைச்சர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் கோடீஸ்வரர்கள் அதிகரித்துள்ளனர். இருப்பினும், நாட்டுக்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் குறைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் தமது கோடீஸ்வர நண்பர்களையே பாதுகாத்தார். அவர்களுக்கு வரி விலக்குகளை வழங்கி



னார். இதனால், அரச வருமானம் வீழ்ச்சியடைந்தது.

நாம் அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம். இந்த வரியை சாதாரண வருமானம் பெறுபவர்களிடம் அறவிட அரசாங்கம் தயாரில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தமும் அரசாங்கத்துக்கு உள்ளது. சில விடயங்களை மேற்கொள்ளுமாறு அந் நிறுவனம் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கிறது.

இருப்பினும் நிறுவனத்தின் கட்டளையை அவ்வாறே மேற்கொள்வதற்கு நாம் தயாரில்லை. ஐ.எம்.எப்.கூறும் நல்ல விடயங்களை நாம் எடுத்துக் கொள்கின்றோம். பொருத்த மற்றவற்றை தூக்கி எறிகின்றோம் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# இருதய பாதிப்பால் உயிரிழப்பதை தடுக்கும் மருந்து ஊசி இறக்குமதி

(கொழும்பு)

இருதய பாதிப்பு ஏற்படுவோர் உயிரிழப்பதை தடுப்பதற்காக பயன்படுத்தப்படும் டெனேக்டிப்ளெஸ் (tenecteplase) மருந்து ஊசியை கொள்வனவு செய்ய தீர் மானிக கப் பட் டுள் ளது.

இதற்கென அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையில் கொள்வனவு குழுவின் சிபார்சுக்கு அமைய இந்திய நிறுவனம் ஒன்றுக்கு 5.525 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்காக சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. (இ-7)

# சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை மைத்திரி ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாது

## கூட்டு எதிரணி கூறுகிறது



(கொழும்பு)

தன்னை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என அழைத்துக் கொள்ளும் மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது.

ஜனாதிபதியின் இந்த தவறான முடிவினாலேயே தற்போது எதிர்க்கட்சி தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது.

பொறளையிலுள்ள என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவராக உள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலை மக்களின் வாக்குகளை மாத்திரமே பெற்றுக் கொண்டவர். அவர் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளையே நாடாளுமன்றில் பேசி வருகிறார் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மிதமிஞ்சிய விடயங்கள்!

குழந்தைகள் அடம்பிடிக்கும் போது கவனியுங்கள். எனக்கு முழு பிஸ்கெட் பக்கெட்டும் அப்படியே வேண்டும். பிரித்துக் கொடுத்தால் அந்த பிஸ்கெட்டைத் தொடவே மாட்டேன் என்று தான் அந்தக் குழந்தை அடம்பிடிக்கும். இவர்களுக்கு கடைசி எதிர்முனைகள்தான் தெரியும். இந்தக் கையில் இரண்டு அந்தக் கையில் இரண்டு என்று உதிரி பிஸ்கெட்டுகளை வாங்கிக் கொண்டு நகரத் தெரியாது.

ஒரு காலததில் உயிருக்குயிராக இருந்த நண்பர்களைப் பற்றி விசாரியுங்கள். அவங்க ரெண்டு பேருக்கும் இப்போ பேச்சுவார்த்தையே இல்லீங்க என்று பதில் வரும்.

எப்போது பார்த்தாலும் ரேடியோவையே கேட்டுக்கிட்டிருப்பாரே, அவர் என்ன ஆனார்? என்று கேளுங்கள். ஒரு நாள் வெறுப்பு வந்து ரேடியோ வைப் போட்டு உடைச்சிட்டாருங்க! என்பார்கள்.

விருப்பம் என்று ஒரு புள்ளி வைத்து அதை வட்டமடித்தால் அதன் மறுமுனை வெறுப்பு என்று முடியும். இந்த இரண்டு சந்திப்புகளுக்குமிடையே அதிக தூரம் இருப்பதில்லை. அதனால்தான் மேற்கூறிய இரு சம்பவங்கள் நடந்தன.

நமக்கு எதில் மகிழ்ச்சி அதிகமிருக்கிறதோ அதில்தான் துன்பமும் இருக்கிறது. நமக்குக் குடும்பத்தால் தான் மகிழ்ச்சி என்றால் அதே குடும்பத்தால் தான் துன்பமும். நமக்குப் பணத்தால் தான் மகிழ்ச்சி என்றால் அந்தப் பணத்தால் தான் நமக்குத் துன்பமும்.

நமக்குக் கிரிக்கெட் ஆட்டத்தின் மீது மிதஞ்சிய ஈடுபாடு இருந்தால் நம்மை அதிகம் மூட் அவுட் பண்ணுவதும் கிரிக்கெட் தான் என்கிற தீர்மானத்திற்கு வந்துவிடலாம்.

எதன் மீதாவது மிதமிஞ்சிய ஈடுபாடு ஏற்படுத்திக் கொண்டால் அதன் மூலமாக நமக்கு ஒரு துன்பமோ அதன் மூலம் அடுக்கடுக்கான துன்பங்களோ வரப்போகின்றன என்று பொருள். இதைச் சொல்ல ஒரு ஜோதிடர் வேண்டியதே இல்லை.

அதேபோல எதை நினைத்து நீங்கள் அதிகம் ஆறுதல் அடைகிறீர்களோ, அதன் மூலமாகத்தான் உங்களுக்குச் சிக்கலே வருகிறது.

இந்த உண்மையை உணராததால் தான் துன்பங்களைச் சமாளிக்க வழி தெரியாமல் போகிறது. இந்தியா அசிங்கமாகத் தோற்றால், சே! இனிமேல் கிரிக்கெட் பக்கமே திரும்புவதில்லை என்கிற தீர்மானம் இதனால் தான் ஏற்படுகிறது. எதிலும் எல்லை காத்து வரையறை செய்து கொண்டு லஷ்மணக்கோடு போட்டுக்கொண்டு எத்தகைய துன்பத்தையும் அருமையாகச் சமாளிக்கலாம்.

**லேனா தமிழ்வாணன்**

# மனிதாபிமானம் வெட்கித் தலைகுனிந்த வல்வைப் படுகொலை

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி இந்தியாவின் அமிர்தசரஸ் நகரிலே ஜெனரல் ரயர் தலைமையில் ஆங்கிலேய இராணுவம் நடத்திய மனிதப் படுகொலையை விட மிகப் பயங்கரமான படுகொலையானது 1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2,3,4 ஆம் திகதிகளில் நடத்தியிருக்கிறது.


வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய இப்படுகொலையை வியட்நாமில் இடம்பெற்ற மயிலாய படுகொலைக்குச் சமமாக ஒப்பிட்டிருக்கிறார். ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜார்ச் பெர்னாண்டஸ் வியட்நாமிலே மயிலாய என்ற இடத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய காட்டுமிராண்டித்தனமான படுகொலையை உலகமே கண்டித்தது. ஆனால் வல்வெட்டித்துறையிலே இந்திய அரசு நடத்திய இப்படுகொலைச் சம்பவத்தை திட்டமிட்டு மறைத்தது பெரும்பாலான இந்தியப்பத்திரிகைகளும் இப்படுகொலைச் சம்பவத்தை மறைப்பதில் இந்திய அரசுக்கு உறுதுணையாக நின்றன.

ஆனால்,இப்படுகொலைச் சம்பவம் நிகழ்ந்த 13 நாட்களுக்குப் பின் வல்வெட்டித்துறைக்குச் சென்ற லண்டன் பைனான்ஸியஸ் டைம்ஸ் பத்திரிகையில் டில்லி நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவம் பற்றிய முழு விபரங்களையும் முதன்முதலாக தமது பத்திரிகையில் வெளியிட்டதைக் கண்டு உலகமே அதிர்ச்சியடைந்தது.

1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி காலை வல்வெட்டித்துறைச் சந்தைச் சதுக்கத்தில் எதிர்பாராத விதமாக விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஆறு இந்திய வீரர்கள் இறந்ததுடன், 11 பேர்காயமடைந்தனர்.

இதையடுத்து வல்வெட்டித்துறையைச் சுற்றி இருந்த மூன்று இராணுவ முகாம்களில் இருந்த ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வல்வெட்டித்துறையை சுற்றி வளைத்தனர். உடனடியாக ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். மூன்று நாட்களுக்கு அச்சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை கதவுகளை உடைத்து உட்புகுந்த இராணுவம் பதறப்பதற சுட்டுக்கொன்றது. இந்த வெறியாட்டத்தில் 63 பேர் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி வழங்க முன்வந்த பிரான்ஸ் மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழையவே இராணுவம் அனுமதிக்கவில்லை.

மொத்தம் 123 வீடுகள் அடியோடு நாசமாக்கப்பட்டன. 45 கடைகள் எரிக்கப்பட்டன. 12 மீன்பிடிப்படகுகள் நாசம் செய்யப்பட்டன. 176 மீன்பிடி வலைகள் எரியூட்டப்பட்டன. வீடுகளில் இருந்த பணம், நகை மின் உபகரணங்கள் இந்திய இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன. ஏராளமான பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர்.



வல்வைப் படுகொலையின் 29ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

இந்த நிகழ்வு நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் இந்தியப் பிரிகேடியர் சங்கர் பிரசாத் மக்கள் குழு உறுப்பினர்களை அழைத்து பின்வருமாறு கொக்கரித்தார்.

இந்திய இராணுவம் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் உங்கள் ஊரை அடியோடு எரிப்பேன். நூற்றுக்கணக்கில் மக்களைச் சுட்டுத்தள்ளுவேன். இராமாயணத்தில் இலங்கை எரிக்கப்பட்டது போல மீண்டும் எரியும். எங்களை யாரும் எதுவும் செய்யமுடியாது. நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவம்.

அவர் மிரட்டியதைப் போலவே சில நாட்களில் அழகிய வல்வெட்டித்துறை சுடுகாடானது. வல்வெட்டித்துறை மட்டுமல்லாது அங்கிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஊரணி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும் இராணுவத்தின் வெறியாட்டம் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையில் மூன்று நாட்கள் நாவேட்டையில் நடத்திய இந்திய இராணுவம் தனது வெறியாட்டத்தை திட்டமிட்டு மறைத்தது. ஜனதா தளப் பொதுச்செயலாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இப்பிரச்சினையை அம்பலப்படுத்துவதில் முன்னின்றார். இப்படுகொலை பற்றிய ஆதாரங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை தொகுத்து ஆங்கிலத்திலும் தமிழிலும் ஹிந்தியிலும் நூலாக வெளியிட்டு இந்தியாவில் மட்டுமல்ல,உலகெங்கிலும் அம்பலப்படுத்தினார். இதனால் ராஜீவ்காந்தி அரசின் முகமூடி கிழிந்தது.

அமைதிக்காக வந்த அமைதிப்படை அரங்கேற்றிய வல்வைப்படுகொலையின் பின்னர் இலங்கை அரசு நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலை, நாகர் கோவில் பாடசாலைப் படுகொலை, யாழ். பொது மருத்துவமனைப் படுகொலை, மூதூர் தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் படுகொலை மற்றும் வீதியோரப் படுகொலைகள், மனிதவுரிமை மீறல்கள், கடத்தல்கள் போன்றவற்றால் ஈழத்தமிழர்கள் நொந்து போயிருந்தனர். அவற்றிலிருந்து தப்புவதற்காக அகதி என்ற அந்தஸ்தைச் சுமந்து பாரத மண்ணிற்கே படையெடுத்தார்கள். தஞ்சமென வந்தவர்களை ஆதரிக்கும் இந்தியத்தேசம் ஒரு முறை-ஒரே ஒருமுறை தீர்க்கமான முடிவுகளை எடுத்து ஈழத்தமிழர் நலத்தினையும் உறுதிப்படுத்த முடியாமற் போய்விட்டது.

தேவாலயங்கள், வைத்தியசாலைகள், பாட சாலைகள், பழம் பெருமை பேசும் பண்பாட்டுத் தலங்கள் எவற்றையும் விட்டு வைக்காது அவற்றை நிரந்தர அழிவுச் சின்னங்களாகப் பதிவு செய்து வந்த இலங்கையரசுகள்தான் எம்மை மாறிமாறி ஆட்சி செய்துவந்தன. ஈழத்தமிழர் பிரச்சினையில் இப்போது பாரத மாதா பாராமுகமாக கண்ணை மூடிக் கொண்டிருக்க எந்தவிதமான நியாயமும் இல்லை. தார்மீகப் பொறுப்பை ஏற்று வழிநடத்தி ஈழத்தமிழர் பால் இந்திரா அம்மையார் காட்டிய அக்கறையை அந்த ஒப்பற்ற சீரிய பணியை இனியும் காலம் தாழ்த்தாது எமது அவல வாழ்விற்கு முற்றுப்புள்ளியிட்டு ஈழத்தமிழர்கள் தமக்குரிய-அவர்களிடம் இருந்து பிரிக்க இயலாத-உரிமைகளுடன் வாழ்வதற்குப் பாரத தேசத்தின் கண்கள் விரைவில் திறந்திட வேண்டி நிற்கின்றோம்.

## விஜயகலாவுக்கு எதிரான விசாரணைகள் நிறைவு

## சட்டமா அதிபருக்கு அறிக்கை

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்டு வந்த விசாரணைகள் முடிவடைந்திருப்பதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



விடுதலைப் புலிகள் மீண்டும் வர வேண்டும் என்று கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரையின் போது விஜயகலா மகேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்துஅவரதுஅமைச்சுப்பறிக்கப்பட்டதுடன், பொலிஸ் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த விசாரணைகளே முடிவுக்கு வந்திருப்பதாகவும், சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக இன்னும் ஓரிரு நாட்களில் அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில், சிறப்பு பொலிஸ் குழுவொன்று, யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் பலரிடம் விசாரணைகளை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அமைச்சர் பொன்சேகாவுடன் இருந்த பாதாள உலகக்குழு உறுப்பினர் கைது

(கொழும்பு)

அமைச்சர் சரத் பொன்சேகாவுடன் இருந்ததாக தெரிவிக்கப்படும், பாதாள உலகக் குழு உறுப்பினர் அருண காந்த அத்தநாயக்க விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



குறித்த நபர் நேற்றுமுன்தினம் இரவு மினுவாங்கொட பகுதியில் வைத்து போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேக நபர் தன் வசம் வைத்திருந்த 7.85 கிராம் ஹெறோயின் போதைப் பொருளும், 2.5 கிராம் புதிய வகை போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுடன் இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்ததாக சிங்கள ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், கடுவெல பகுதியில் பொதுமக்கள் பேரணியில் பேசிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, போதைப்பொருள் கடத்தல் சம்பவத்தில் வன மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோர் சம்பந்தப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டை இராணுவமயப்படுத்த இந்த அரசாங்கம் முனைகிறது

## மகிந்த எச்சரிக்கை



(கொழும்பு)

அரசாங்கம் நாட்டை இராணுவமயப்படுத்த முனைவதாகவும் இது ஆபத்தான நிலை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

"நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது. இதனால், நாட்டை இராணுவமயப்படுத்த முயற்சிக்கிறது. இராணுவ மயமாக்கலை சட்டபூர்வமாக்க அரசாங்கம் முனைகிறது.


150 ஆண்டுகளாக நடைமுறையில் இருப்பது போல, சிவில் விவகாரங்களில் விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸார் அனுமதிக்கப்பட வேண்டும். இந்தப் பணி படையினருக்கு முதல்முறையாக வழங்கப்பட்டுள்ளது. இது நாட்டை இராணுவமயப்படுத்தும் முயற்சி.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொலைகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கப் படையினர் அனுமதிக்கப்படுவது ஆபத்தானது.

தற்போதைய அரசாங்கம் படைகளைப் பலப்படுத்துவதை விட்டு விட்டு அவர்களுக்கு பொலிஸ் அதிகாரங்களைக் கொடுக்கிறது. இதனை அனுமதிக்க முடியாது.

சட்டம் ஒழுங்கை பொலிஸார் பேண முடியாவிட்டால், பலவீனம் என்ன என்று விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் ம்கிந்த தெரிவித்துள்ளார். (இ-7)







புலோலி தென் மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைக்கப்படுவதையும் நிலையத் தலைவர் மு.ஜெகதேவன் தலைமையுரையாற்றுவதை யும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மகாலிங்கம்)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

நேற்றைய வலம்புரியின் இப்பகுதியில் பிரசுரமான பிறப்பு எண் 3 விதி எண் 2 என்பதை பிறப்பு எண் 3 விதி எண் 1 எனத் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

## பிறப்பு எண் 3 விதி எண் 2

தைரியசாலிகள் போலத் தோற்றமளிப்பார்கள். இளமையிலேயே இன்ப துன்பங்களை அனுபவித்து விடுவார்கள். அன்புள்ளம் கொண்டவர்கள். வெளியூர், வெளிநாட்டுப் பிரயாணத்தின் மூலம் பெரும் பணம் சம்பாதிப்பார்கள். பல்நோக்குச் சிந்தனையாளர்கள். தன்னடக்கம் மிக்கவர்கள். நல்ல வீடு, வாகன யோகம் உண்டாகும். துன்பப்படுபவர்களின் துயரத்தைப் போக்குவார்கள். கலைகளின் மூலகர்த்தாவாகவே விளங்குவார்கள். கலை அழகு மிகுந்த பொருட்களை வாங்கிக் குவிப்பார்கள். தொழிலில் பெரிய சாதனை செய்வார்கள்.

மக்கள் மத்தியில் கலைகளைப் பரப்பும் ஆசானாக இருப்பார்கள். சிறிய பிரச்சினைக்கும் தடைகளுக்கும் பெரிதாகக் குழம்பிக் கொள்வார்கள். மனோதிடம் குறைந்து காணப்படும். தெய்வத் துணையை அதிகம் நாடுவார்கள். நல்ல புத்திர பாக்கியமும் இல்லறமும் அமையும். ஞானமிக்கவர்கள். பெரியவர்களை மதிப்பார்கள். குருபக்தி உண்டாகும். இவர்களின் திட்டங்கள் எதுவும் நிலையாக இருக்காது. சில நேரங்களில் முரட்டு சுபாவம் தோன்றினாலும் அடுத்த நிமிடமே சாதுவாக மாறி விடுவார்கள். தனது சுய சிந்தனைப்படியே செயலாற்றுவார்கள். தனது இலாபத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வெற்றி பெறுவார்கள். வாகனப் பிரியர்கள்.

தனக்கென்று வரும் பிரச்சினைகளில் திடசித்தம் இருக்காது. உதவி என்று தன்னிடம் கேட்டு வருபவர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தவறாமல் செய்வார்கள். இவர்கள் யாரிடமும் சென்று உதவி கேட்க மாட்டார்கள். தனது சுக துக்கங்களை மற்றவர்களிடம் சொல்ல மாட்டார்கள். இரகசியம் காப்பார்கள். சுயகௌரவம் பார்ப்பார்கள். அறிவுக் கூர்மையுடையவர்கள். தனது சொந்த வேலைகளைவிடவும் பொதுக் காரியத்தில் அதிக அக்கறையுடையவர்கள். புகழ் பெறுவார்கள். விடாமுயற்சியுடையவர்கள். தனது குழந்தைகள் மற்றும் மனைவி மீது தனிப்பாசம் இருக்கும். உழைப்பாலும், நீதி தவறாத குணத்தாலும் பல பதவிகள் இவர்களைத் தேடி வரும். கலைகளில் ஈடுபாடு மிகுந்து காணப்படும்.

இவர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும். பேராசை இல்லாதவர்கள். பிறருடைய பதவிகள் மேல் இவர்களுக்கு ஆசையிருக்காது. தனக்குத் தீமைகள் செய்தவருக்குக்கூட உண்மையாக உழைப்பார்கள். புதிய கொள்கைகளை உடையவர்கள். தனது மனதில் தோன்றும் கருத்துக்களை தெளிவாக எடுத்துரைப்பார்கள். சுய கௌரவத்தையும், மரியாதையையும் தன் உயிரை விட மேலாக நினைத்து வாழ்ந்து வருவார்கள்.

சட்டங்களை நிறைவேற்றும் சாமர்த்தியசாலிகள். சுதந்திரமாக வாழ்வதையே பெரிதாக நினைப்பார்கள். தீய சக்திகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவார்கள். விரோதிகளைக் கண்டு அஞ்சாமல் போரிட்டு வெற்றி பெறுவார்கள். போரில் தோல்வியடைவதைவிட செத்து மடிவதே மேல் என்னும் கொள்கையுடையவர்கள். இலட்சியத்தை அடைய, எதையும் துறக்கும் தியாகிகள். மனிதருள் மாணிக்கமாவார்கள். பெரிய மகான்களாகப் போற்றப்படுவார்கள். தியாக மனப்பான்மை அதிகம் இருக்கும். நுண்ணறிவு உடைய இவர்கள் கூர்மையான மதிநுட்பத்துடன் எக்காரியத்தையும் செய்து புகழ் மாலை சூடுவார்கள்.

கல்வியில் சிறு வயது முதலே முதன்மை பெறுவார்கள். இளமைக்காலந் தொட்டு அறிவாளிகள் என்று பாராட்டப்படுவார்கள். சிறிய தவறுகள் தனக்கு வேண்டியவர்கள் செய்தால் கூடச் சுட்டிக்காட்டுவார்கள். மங்கையிடமும், மதுவிடமும் நாட்டம் செல்லும். சிறந்த பேச்சுத் திறமையைக் கொண்ட இவர்கள் மனதில் உள்ளதை மறைக்காமல் பேசுவார்கள்.




சில நேரங்களில் மிகைப்படுத்திப் பேசிவிடுவார்கள். மனோசக்திக்குக் கட்டுப்பட்டவர்கள். மனதில் புதுப்புதுக் கருத்துக்கள் உதித்தவாறு இருக்கும். தெய்வ நம்பிக்கை அதிகம் உடையவர்கள்.

எதையும் தானே முன்னின்று நடத்தினால்தான் மனத்திருப்தி அடைவார்கள். இவர்கள் உடலில் அபூர்வசக்திகள் குடிகொள்ளும். மிகவும் கடினமான உழைப்பாளிகள். அனைவரிடமும் அன்பு செலுத்துவார்கள்.

தன்மீது அன்பு வைத்திருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வேண்டிய செலவுகளைச் செய்வார்கள். பார்ப்பதற்கு மிகவும் அமைதியானவர்கள். எல்லோருடனும் ஒத்துப்போவார்கள். மற்றவர்களைச் சந்தோசப்படுத்தும் திறனுடையவர்கள். சில நேரங்களில் தனிமையை விரும்புவார்கள். அனுபவ சாலிகள். வைத்தியம் பலிதமாகும். சொன்ன சொல்லைக் கேட்க மாட்டார்கள். நல்ல உயரமும், நீண்ட கழுத்தும் கொண்டு உருவம் முரடாக இருந்தாலும் உள்ளம் குழந்தை போன்றது. பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சமுதாய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அரசியலில் ஈடுபடுவார்கள்.

இன்ப துன்பத்தை யாரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். இரகசியம் காப்பதில் வல்லவர்கள். செய்யும் தொழிலில் மனத் தெளிவுடன் இருப்பார்கள். எறும்பைப் போன்று சுறுசுறுப்பை உடையவர்கள்.

மனஇயல் மார்க்கமறிந்தவர்கள். இலக்கியம், தத்துவம், வரலாறு அறிந்தவர்கள். இவர்களுக்கு மனைவி மதி நுட்பமிக்க மந்திரிகள் போல ஆலோசனைகள் வழங்கும் நபராக அமைவார்கள். வீட்டில் இவர்கள் குழந்தைகள் போலவே நடந்து கொள்வார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
3,12,21,30,1,10,19,28,5,14,23

துரதிர்ஷ்ட திகதிகள்
6,15,24,9,18,27

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஒரேஞ், கத்தரிப்பூ நிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை, சிவப்பு, இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கனகபுஷ்பராகம், எமிதிஸ்ட், முத்து, சந்திரகாந்தக் கல், ஜேட், டைகர்ஸ் ஐ

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

08

கனவான்களே, இந்த ஓலைச் சுவடிகள் சிதைந்து போகின்றனவே என்ற கவலை உங்களுக்கு இல்லையா? இறந்து கொண்டிருக்கும் உங்கள் தாய்க்கு நீங்கள் எதுவுமே செய்கின்றீர்கள் இல்லை. தேசிய உணர்வு, மதவுணர்வு, மொழியுணர்வு என்பன இல்லாமையைப் பெருமைக்குரிய விடயம் என எண்ணுகிறீர்களா? தயவு கூர்ந்து இதனை ஆழ்ந்து சிந்தியுங்கள். (சி.வை.தாமோதரம்பிள்ளை, பதிப்புரை, யாழ்ப்பாணம், 1971, பக். 45-46) (மொழி பெயர்ப்பு)

கிடைத்தற்கரிய தமிழ் நூல்களையும், கையெழுத்துச் சுவடிகளையும் ஆராய்ந்தது மட்டுமல்லாது, இலங்கைத்தமிழர் தொடர்பாக போர்த்துக்கேய, டச்சு, ஆங்கில கையெழுத்துப் பிரதிகளையுங்கூட ஆராய்ந்துள்ளார். ஐரோப்பிய நூலகங்களுக்கும், ஆவணக் காப்பகங்களுக்கும் சென்றது மாத்திரமல்லாது, இலங்கை, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் சென்று, எவ்வளவுக்குத் தமிழர் ஆய்வு தொடர்பான மூலாதாரங்களையும் கிடைத்தற்கரிய நூல்களையும் தேடவேண்டுமோ, அவ்வளவுக்கு தேடுதல் செய்துள்ளார்.

இந்த ஆய்வின் நோக்கத்தை அடைவதற்கு, இலங்கையின் அரச தேசிய ஆவணக் காப்பகம், தேசிய அரும்பொருள் நூலகம், றோயல் ஏசியற்றிக் கொசயிற்றி நூலகம் என்பவற்றிலுள்ள முக்கிய தொகுப்புக்கள் பூரணமாக ஆராயப்பட்டுள்ளன.

இந்தியாவின் தமிழ்நாட்டில், சென்னையில் மறைமலையடிகள் நூலகம், சுவாமிநாத ஐயர் நூலகம், றோயா முத்தையா நூலகம், சென்னை கன்னிமாரா நூலகம் என்பவற்றிலும் தேடல் நிகழ்ந்தது. மேலும் தமிழ்நாட்டில், திருநந்தாவன ஆதீனம், திருவாவடுதுறை ஆதீன நூலகம், அங்குள்ள ஆறுமுகநாவலர் சம்பந்தமான குறிப்புகள், தஞ்சாவூரிலுள்ள தமிழ் பல்கலைக்கழகத் தொகுப்புகள் என்பன யாவும் இன்றைய தமிழர் சம்பந்தமான மூலாதாரங்கள் உள்ளனவா என அறிவதற்கு, ஒழுங்கு முறையான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன.

மேற்குறிப்பிட்ட நூலகங்களும், ஆவணக் காப்பங்களும் ஆராயப்பட்ட பின்னர் தேடுதல் ஐரோப்பாவில் தொடர்ந்தது. அங்கு பிரான்ஸ் தேசிய ஆவணக் காப்பகம், பரிஸ் தேசிய நூலகம், ஜேர்மனி தேசிய ஆவணக் காப்பகம், ஜேர்மன் பல்கலைக்கழகங்களான ஹெய்டில் பேர்க், கொலோன் நூலகங்கள், சுவிட்சர்லாந்து தேசிய ஆவணக் காப்பகம் என்பவற்றிலும் தமிழர் தொடர்பான பயனுள்ள ஆதாரங்கள் உள்ளனவா என ஆராயப்பட்டது.

இருப்பினும் இவ் ஆய்வின் பெரும்பகுதி போர்த்துக்கல், நெதர்லாந்து, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலேயே நிகழ்ந்தது. இங்கு பூரணமான ஆய்வை மேற்கொள்ளப் பல மாதங்கள் எடுத்தன. போர்த்துக்கல்லில் லிஸ்பன் நகரிலுள்ள தேசிய ஆவணக் காப்பகம், தேசிய வரலாற்று மையம், தேசிய நூலகம் என்பவற்றில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. நெதர்லாந்தில், ஹேக்கிலுள்ள தேசிய ஆவணக் காப்பகத்திலும் ஆராய்ச்சி தொடர்ந்தது.



பழங்காலத்து தமிழ்க் குடும்பங்கள்

> “தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு, வடமத்தி, வட மேற்கு ஆகிய பிரதேசங்களை உள் ளடக்கிய வரலாறாக, இவ் அத்தியாயம் அமைகிறது. அத்தோடு தமிழர்களின் புராதனகால மத, மொழி, சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றியும் இவ் அத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.”



பழங்காலத்து தமிழ்க் குருமார்கள்

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கைத் தமிழர் பற்றி ஒரு பூரணமான ஆய்வை மேற்கொண்டு எழுத வேண்டிய ஒரு கட்டாய நிலைமையின் விளைவாக இக்கட்டுரை வெளி வந்திருக்கிறது. இந்நூலில், கி.மு, 300களில் இருந்து நவீன காலம் வரையுள்ள இலங்கைத் தமிழர்களின் வரலாறு பத்து அத்தியாயங்களில் உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது. காலவரன்முறையின் படியே (Chronological) தமிழர்களின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது.

முதலில்ஆய்வு பற்றிக் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் முதல் நான்கு அத்தியாயங்களும் மிக அரிதாக கிடைக்கப் பெற்ற மூலாதாரங்களை வைத்துக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டவையாகும். ஆதலினால் கூடுதலாக ஆதாரங்களை முதலில் எடுத்துக் காட்டி அவற்றினூடாகப் பெறக்கூடிய வரலாற்று உண்மைகளை இனங்கண்டு தொடர்புபடுத்தி எழுதப்பட்டவையாக அமைகிறது. எனவே வரலாற்று ஆதாரங்கள் பற்றிய விபரங்களை மேற்படி அத்தியாயங்கள் கூடுதலாக உள்ளடக்கி இருக்கும். அத்துடன் தமிழர்களின் ஆதிகால வரலாறு பற்றி விஞ்ஞான ரீதியாக ஆய்வுகளை மேற்கொண்டு பேராசிரியர்கள் கா.இந்திரபாலா, S.பத்மநாதன், P.இரகுபதி, ஸ்ரீதர்சன் செனவிரத்தின, டிரான் தரணியகல, L.குணவர்த்தன ஆகியோரின் ஆய்வுகளிலிருந்தும் மிக முக்கியமான தரவுகளை கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் வருகின்ற அத்தியாயங்கள் அனைத்தும் பல வகையான மூலாதாரங்கள் கிடைக்கப் பெற்றதன் விளைவாக, நேரடியாக வரலாற்று விடயங்களை விளக்கிச் செல்கின்ற போக்கினைக் கொண்டதாக அமையும்.

அத்தோடு போர்த்துக்கீச, டச்சு மொழிகளில் உள்ள சில சொற்பதங்களுக்கு உரிய கருத்து பெற முடியாமலும் இருக்கும் என்பதனை முன்கூட்டியே தெளிவு படுத்துவது முக்கியமானதாகும்.

முதலாவது அத்தியாயம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பு, அதாவது கி.மு 300 களுக்கு முன்பு இலங்கையிற் தமிழர்கள் எவ்வாறு தோற்றம் பெற்றார்கள், எந்தெந்தப் பிரதேசங் களில் அவர்கள் தமது வாழ்க்கையை (Settlement) ஆரம்பித்தார்கள் போன்ற பூர்வீக விடயங்கள் பற்றி இதுவரை கிடைக்கப் பெற்ற தொல்லியல் ஆதாரங்கள், புராதன வரலாற்றுக் குறிப்புக்கள், இலக்கிய ஆதாரங்கள், புலமைசார் அறிஞர்களின் ஆய்வு முடிவுகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

அத்துடன் கி.மு 300 தொடக்கம் கி.பி 300 வரையுள்ள வரலாற்றுக் காலம் பற்றியும் இவ் அத்தியாயத்தில் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. முறையாக ஆராய இக்காலகட்டம் பற்றி எதுவித கல்வெட்டுகளும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

அதனால் முக்கியமாக இதுவரை கிடைக்கப் பெற்ற தொல்லியல் ஆதாரங்களையும், பாளி நூல்களில் உள்ள குறிப்புகளையும், தென் இந்திய இலக்கியக் குறிப்புகளையும் மேலும் வர லாறு, தொல்லியல், மானிடவியல் துறை சார்ந்த அறிஞர்களின் ஆய்வு முடிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

முக்கியமாக இதுவரை இவ் விடயம் பற்றி ஆய்வு செய்த வரலாற்று ஆசிரியர்களின் பாரம்பரிய வரலாற்று அணுகுமுறைகளில் இருந்து சற்று விலகி, கிடைக்கப் பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் தமி ழரின் புராதன வரலாறு சில புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு எழுதப்பட்டுள்ளது.

இவ் அத்தியாயம் தமிழரின் ஆரம்பகால ஆட்சி அமைப்புகள், அவர்களின் அதிகார மையங்கள் எவ்வெப் பிரதேசங்களில் எவ்வாறு இடம்பெற்றன என்பன பற்றி ஆதாரங்களின் அடிப்படையில் ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு, வடமத்தி, வட மேற்கு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய வரலாறாக, இவ் அத்தியாயம் அமைகிறது. அத்தோடு தமிழர்களின் புராதனகால மத, மொழி, சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றியும் இவ் அத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இரண்டாவது அத்தியாயத்தில் கி.பி 300களிலிருந்து கி.பி 900 வரையுள்ள காலப் பகுதியை உள்ளடக்கியுள்ளது. இக்காலகட்ட இலங்கை வரலாறு குறிப்பாகத் தமிழர்கள் வரலாறு ஓர் இருண்ட காலப் பகுதியைக் கொண்டதாகவே வரலாற்றாசிரியர்கள் கருதுவதுண்டு.

(தொடரும்)

## வடக்கில் 250 பாடசாலைகளில் 50 இற்கும் குறைவான மாணவர்கள்

# தமிழர்களின் சனத்தொகை அபாயக் கட்டத்தில்

## வடக்கு கல்வியமைச்சர் சர்வேஸ்வரன் அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

**தமிழர்களின் சனத்தொகை அதிகரிப்பு விகிதம் ஆண்டுதோறும் குறைவடைந்து அபாயக் கட்டத்தை அடைந்திருக்கிறது. ஒரு ஆண்டில் ஒரு கல்வி வலயத்தில் ஆயிரம் மாணவர்கள் குறைவடைகின்றார்கள். நாங்கள் உடனடியாகவே எமது தமிழ் சமூகத்தின் பிள்ளைப்பிறப்பு விகிதத்தை அதிகரிக்க வேண்டும். இல்லையெனில் இன்னும் ஐந்து ஆண்டுகளில் நாங்கள் இலங்கையின் மூன்றாம் தர மக்களாக மாறிவிடுவோம் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**







யாழ்.மத்திய கல்லூரியின் 202 ஆவது பரிசில் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஒரு கல்வி அமைச்சராக வடக்கு மாகாணத்தின் பல பாடசாலைகளுக்குப் போயிருக்கிறேன். எமது மாகாணத்திலே 1010 பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றில் 120 பாடசாலைகள் 20 இற்கும் குறைந்த மாணவர்களைக் கொண்டிருக்கின்றன. 250 பாடசாலைகள் 50 இற்கும் குறைவான மாணவர்களைக்கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாண நகரத்தின் சில பாடசாலைகள், பருத்தித்துறை நகரத்தின் சில பாடசாலைகள், கிளிநொச்சி நகரத்தில் ஒரு சில பாடசாலைகள், இதே போன்று வவுனியா, மன்னார் போன்ற நகரங்களில் உள்ள சில பாடசாலைகளைத் தவிர மிகுதி அனைத்துப் பாடசாலைகளிலுமே மாணவர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் வடமராட்சி கல்வி வலயத்தில் மட்டும் முதலாம் தர மாணவர்களின் தொகை ஆயிரம் மாணவர்களால் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு வருடத்திலே ஒரு வலயத்திலே ஆயிரம் மாணவர்கள் குறைவடைந்திருக்கிறார்கள் என்று சொன்னால் எங்களுடைய மாணவர்களின் எதிர்காலம், எங்களுடைய இருப்பினுடைய எதிர்காலம் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும். இலங்கையில் இடம்பெற்ற போர் ஒரு மில்லியன் தமிழ் மக்களை நாட்டை விட்டு வெளியேற்றியிருக்கிறது. இதை விட போராளிகள், பொது மக்கள் உட்பட மூன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட் டிருக்கிறார்கள்.

இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியோராக இருந்தாலும் சரி அல்லது கொல்லப்பட்டவர்களாக இருந்தாலும் சரி இவர்களின் வயதெல்லைகளைப் பார்ப்போமாக இருந்தால் பெரும்பாலானோர் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். ஆக இந்த மக்களும் எங்களிடம் இல்லை. இவர்களின் சந்ததிகளும் எங்களிடம் இல்லை. ஆகவே நாங்கள் மூன்று நான்கு தலைமுறையை இழந்திருக்கிறோம்.

இப்போது இலங்கையின் சனத்தொகை பெருக்க விகிதம் முஸ்லிம்கள் ஆயிரம் பேருக்கு 8.7 பேர் அதிகரிக்கிறார்கள். சிங்களவர்கள் ஆயிரம் பேருக்கு 5.5 பேர் அதிகரிக்கிறார்கள் தமிழர்கள் 1.5 பேர் அதிகரிக்கின்றார்கள். தேசிய சராசரியை விட மிகமிக குறைவான மக்கள் தொகை அதிகரிப்பில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். கண்டிப்பாக எமது சனத்தொகை தொடர்பில் மீள் சிந்தனை கண்டிப்பாக எங்களுக்குத் தேவை. சிங்கள இனவாத பிக்கு ஞானசார தேரர் சிங்களவரிடத்திலே பரப்புரை செய்து வருகிறார். இங்கே சிங்கள இனம் அழிந்து கொண்டு வருகிறது.

எனவே 6,7 பிள்ளைகள் பெறுங்கள் என்கிறார். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது அவரது பாதீட்டிலே சிங்கள இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் மூன்றாவது பிள்ளை பெற்றால் அவரது பிள்ளைக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும் என அறிவித்து அதனை நடைமுறையும் படுத்தினார். அந்த திட்டத்தில் இன்னும் மாற்றமில்லை. இந்த அரசாங்கமும் அதை செய்து கொண்டுதான் இருக்கிறது.

இப்போது இருக்கின்ற சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் எமது இனம் சென்று கொண்டிருக்குமானால் நாங்கள் இன்னும் ஐந்து ஆண்டுகளில் இலங்கையின் மூன்றாவது இனமாக சுருங்கி விடுவோம். ஆகவே பாடசாலைகளுக்கு மாணவர்கள் குறைவு என்றால் எங்களுக்கு மாற்று வழிகள் இல்லை. எல்லோரும் அதிக குழந்தைகளைப் பெற்றேயாக வேண்டும். வேறு எந்த குறுக்கு வழிகளிலும் இதற்கு தீர்வு காணமுடியாது என்றார்.

நிகழ்வில் கல்வி மற்றும் இணைபாட விதானங்களிலும், விளையாட்டுக்களிலும் சிறப்பாக செயற்பட்ட மாணவர்களுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் துணைவியார் திருமதி சுபாஜினி சர்வேஸ்வரன் சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கிவைத்தார். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7-9)

## நல்லிணக்க அலுவலக வேலைத்திட்டங்கள் குறித்து சந்திரிகா தலைமையில் யாழில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

"என்டர்பிரைஸ்ஸ்ரீ லங்கா" அரசாங்க வட்டிச் சலுகை கடன் திட்டம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் வடக்கில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணத்துக்குமான அலுவலகத்தின் ஏற்பாட்டில் அந்த அலுவலகத்தின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி விஜயகலா மகேஸ்வரன், மாவை சேனாதிராசா, மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச அதிபர்கள், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## அமைச்சர்கள்,எம்.பிக்களின் கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன. தற்போது இவர்கள் பெற்றுக் கொள்ளும் கொடுப்பனவை விட, 215 சதவீத கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த கொடுப்பனவு அதிகரிப்பானது, கடந்த ஜனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வருமெனவும் இந்த மாதம் நிலுவைத்தொகையுடன் கூடிய கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு, 54ஆயிரத்து 285 ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து 20ஆயிரம் ரூபாவாகவும், பிரதி அமைச்சருக்கான கொடுப்பனவு, 63 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவாகவும், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களுக்கான கொடுப்பனவுகள், 65 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட உள்ளது.

கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், அநுரகுமார திஸாநாயக்க, ஒன்றிணைந்த எதிரணியின் தலைவர், தினேஷ் குணவர்த்தன, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தலைவர், நிமால் சிறிபால டி சில்வா மற்றும் சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துக் கொண்டிருந்தனர். (இ-7)

## பௌத்த அலுவல்கள் ஆணையர் இராஜினாமா

(கொழும்பு)

பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நிமல் கொட்ட விலகெதர பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை புத்த சாசன அமைச்சின் செயலாளருக்கு வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். நிமல் கொட்டவிலகெதர தனது பதவி விலகல் கடிதத்தை கடந்த 30ஆம் திகதி ஒப்படைத்துள்ளதுடன், அவர் தற்போது சமுர்த்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (இ-க)

# நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழர்கள் நன்மையடைவதைத் தடுக்கச் சதி

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டு

(ஹற்றன்)

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழர்களுக்கு நல்லது நடக்கக் கூடாது என்ற நோக்கத்தில் ஒரு கும்பல் செயற்பட்டு வருவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டினுடைய ஒற்றுமையை சீர்க்குலைப்பதற்கு பல்வேறு சக்திகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

வடக்கில் புலிகள் உருவாகுவதாகவும் தெற்கில் சிங்களவர்களுக்கு துரோகம் இழைக்கப்படுவதாகவும் முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் கூறி தத்தமது அரசியல் தேவைகளுக்காக மக்களைக் குழப்பி வருகின்றனர்.

எதிர்க்கட்சிகளின் இவ்வாறான முயற்சிகளுக்கு இடமளிக்காது. நல்லாட்சியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவர்களின் பதற்றத்தைத் தணிக்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

இரும்புச் சத்துக் குறைவினால் ஏற்படக்கூடிய பதற்றம் இலங்கையில் முக்கிய சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளதோடு, பதற்றத்தினால் களைப்பாற மற்றும் சோம்பல் நிலை மக்கள் மத்தியில் ஏற்படுவதனால் செயற்றிறன் ஆற்றல் குறைவடைவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மார் ம்றறும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்த நிலை ஏற்படுவதை தடுப்பதற்காக இரும்புச் சத்துக் கொண்ட குளிசைதளை வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேபோன்று இதற்கு தீர்வாக பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட உணவுகளில் இரும்புச்சத்து விற்றமின்களை ஒன்றுசேர்ப்பதன் மூலம் இதனைக் குறைத்துக்கொள்ள முடியும் என கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைவாக அரிசி மற்றும் கோதுமை மாவில் இருழ்புச்சத்து மற்றும் போலி அமிலத்தை ஒன்று சேர்த்து வலுவூட்டும் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை அமைப்பதற்காக சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன முன்வைத்த பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# புரிந்துணர்வு அடிப்படையில் உரும்பிராயில் வீதி மீளத் திறப்பு





(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கிலுள்ள ஞானவைரவர் கோவிலை ஊடறுத்துச் செல்லும் வீதி மீளவும் மக்கள் போக்குவரத்திற்கு திறக்கப்பட்டது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் வட்டார உறுப்பினர், சிவில் சமூக பிரதிநிதிகள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக நீண்டகாலமாக இரு தரப்புக்களிடையே நிலவிவந்த முரண்பாடுகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இவ் வீதி திறக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் வடக்கில் ஞானவைரவர்கோவிலை அண்மித்துச் செல்லும் வீதியின் போக்குவரத்துக்கள் கோவிலின் முன்பாக தடைப்பட்டிருந்தன. இவ் வீதியைத் திறக்க வேண்டும் என்ற மக்களின் விருப்புக்கு இணங்க தற்போது பிரதேசவாசியான க.திருச்செல்வம் என்பவர் தனது காணியூடாக போக்குவரத்துக்கான நிலத்தினை வழங்கினார்.

இவ் வீதி கடந்த காலத்தில் மிகவும் ஒடுக்கமாகக் காணப்பட்டாலும் இவ் வீதியினூடாக உரும்பிராய் வடக்கில் இருந்து மானிப்பாய்-கைதடி பிரதான வீதியை மக்கள் அடையக் கூடியதாகவும் உரும்பிராய் மேற்கின் பகுதிகளை அடையக்கூடிய குறுக்குப் பாதையாகவும் காணப்பட்டது.

இந் நிலையில் இவ் வீதியின் தேவை கருதி பல காணி உரிமையாளர்கள் தம் காணிகளை விட்டுக் கொடுத்திருந்தனர்.

எனினும் சில இடங்களில் காணி விட்டுக்கொடுப்புக்கள் நடைபெறவில்லை. இதனால் பாதை இடைநடுவே தடைசெய்யப்பட்டுக் காணப்பட்டது. இவ்விடத்தில் உரிய காணி உரிமையாளர்களுடன் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் உரும்பிராய் மேற்கு வட்டாரத்தின் பிரதேச சபை உறுப்பினர் சிவகுமார் அகீபன், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பேச்சு நடத்தியதன் பயனாக பொது உடன்பாடு எட்டப்பட்டு இப்பாதை விஸ்தரிக்கப்பட்ட பாதையாக அனைத்துத் தரப்புக்களின் நல்லிணக்கத்துடனும் வீதி திறந்து வைக்கப்பட்டது. இப்பாதை திறக்கப்பட்டதனைத் தொடர்ந்து பாதையைத் திறந்து வைப்பதற்கு ஒத்துழைத்த அனைத்துத் தரப்புக்களும் காணியினை உவகையுடன் அன்பளித்த காணி உரிமையாளர்களும் உரும்பிராய் வடக்கு ஞானவைரவர் ஆலயத்தில் வழிபாடுகளை நடத்தினர்.

எதிர்வரும் காலத்தில் இவ் வீதி வர்த்தமானி அறிவித்தல் வாயிலாக பதிவு செய்யப்படவுள்ளதுடன் விரைவில் தார் வீதியாக மாற்றியமைப்பதற்கு முயற்சிப்பதாக தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். (இ-9)



# ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி - சாகல தகவல்

(கொழும்பு)

2016ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு அக்ரஹார காப்புறுதி வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த காப்புறுதி கடந்த 2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஓய்வூதியம் பெற்ற அரச ஊழியர்களுக்கு மாத்திரமே தற்சமயம் வழங்கப்படுகிறன என்பதுடன் இந்த புதிய வேலைத்திட்டத்தின் மூலம் ஆறு இலட்சம் பேர் நன்மை அடைவர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## பெற்றோல் அற்ற ஆட்டோ அரசு புதிய திட்டம்-மங்கள

(கொழும்பு)

பெற்றோல் அற்ற ஆட்டோ பயன்பாடுள்ள நாடாக 2035 ஆம் ஆண்டில் இலங்கையை மாற்றப் போவதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். தற்போதுள்ள பெற்றோல் ஆட்டோவிலிருந்து மின்சாரப் பயன்பாட்டில் செல்லும் ஆட்டோப் பயன்பாட்டுக்கு மாறுபவர்களுக்கு விசேட சலுகைகளை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இதற்காக வேண்டி ஜப்பான் நாட்டுடன் இணைந்து வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் தற்பொழுது 1.3 மில்லியன் ஆட்டோக்கள் காணப்படுவதாகவும் இதில் 8 இலட்சம் ஆட்டோக்கள் அன்றாட பொதுமக்களின் பயன்பாட்டுக்காக சேவையாற்றி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை

(கரணவாய்)

ஆடி அமாவாசை தினத்தினை முன்னிட்டு நெல்லியடி வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை (11.08.2018) விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-60)

## தேர்த்திருவிழாவில் பண்ணிசையரங்கு

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் தேர்த்திருவிழா எதிர்வரும் 10.08.2018 முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் சுவாமி தேரில் ஆரோகணித்த வேளை ஆலய பிரதான மண்டபத்தில் கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பண்ணிசையரங்கு பக்கவாத்திய சகிதம் இடம்பெறும்.

## பஜனையும் ஆன்மீக உரையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருதனார்மட வீதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலைய பிரார்த்தனை மண்டபத்தில் இன்று மாலை 5 மணிக்கு விசேட பஜனை நடைபெறும். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு செங்கல்பட்டு இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீமத்சுவாமி நீலமாதவானந்தா விசேட ஆன்மீக உரையாற்றவுள்ளார்.(இ)

## புதிய யோகாசனப் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய யோகாசன பயிற்சி வகுப்பு யாழ்.கந்தர்மடம் பலாலி வீதியில் அமைந்துள்ள இந்து சமய பேரவை மண்டபத்தில்நாளை காலை 6 மணியளவில்ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பயிற்சி வகுப்பில் வயது வேறுபாடின்றி ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். உடல்,உள ஆரோக்கியத்துக்கான பயிற்சியும் நெருக்கீட்டில் இருந்து விடுபடுவதற்கான பயிற்சியும் வழங்கப்படும். இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்வோர் பேரவையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இப்பயிற்சி நெறி வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6 மணியிலிருந்து காலை 7 மணிவரை நடைபெறும். (இ)

## பாடசாலை பரிசில் நாள்

(சாவகச்சேரி)

யாழ்.மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயத்தின் பரிசில் நாள் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய கலையரங்கத்தில் இடம்பெறும். கல்லூரி அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரான்ஸ் நாட்டின் பழைய மாணவர், ஆசிரியர் சங்கத் தலைவர் நடராசலிங்கம் ஜெகதீசனும், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவரும் சாவகச்சேரி நகராட்சி மன்ற உப தவிசாளருமான அருணாசலம் பாலமயூரன், தென்மராட்சி பிரதேச செயலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வறாணி ஜெகதீபனும் கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர்களான த.பரமானந்தம், கோ.சுதந்திரநாதன், கு.கலாரஞ்சினி, கு.பவானி ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ-30)

## பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய மாணவர்களின் இசைமணி, நடனமாணி, 1ஆம்,2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருட தேர்வு வெளிவாரி பரீட்சைகள்-2014 எதிர்வரும் 20.08.2018 வரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை யும் அனுமதி அட்டைகளையும் எதிர்வரும் 06.08.2018 திங்கட்கிழமை தொடக்கம் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.(இ)




## சிங்கம் சொன்ன தீர்ப்பு



செண்பகக் காட்டில் மயில், கிளி, குயில், வண்ணத்துப்பூச்சி நான்கும் கூடியிருந்தன. மயில் உற்சாக மிகுதியில் தன் நீண்ட அழகிய தோகையை விரித்து ஆடியது.

அதைக் கண்டதும் குயில் கூவியது. குயில் தனக்குப் போட்டியாகக் கூவுவதாக நினைத்த மயில், "நிறுத்து... நான் ஆடும்போது ஏன் நீ கூவ வேண்டும்?" என்று கோபத்துடன் கேட்டது.

"ஏன் நீ ஆடும்போது நான் கூவக் கூடாது என்று சட்டம் உள்ளதா? எனக்கு நல்ல குரல் வளம் இருக்கிறது. நான் கூவுகிறேன். அதில் உனக்கு என்ன கஷ்டம்?" என்று பதிலடி கொடுத்தது குயில்.

"உனக்குக் குரல் வளம் இருக்கலாம். ஆனால் உலகில் உள்ள அத்தனை உயிரினமும் மயங்கக் கூடிய அழகு எனக்கு மட்டும்தான் இருக்கிறது. ஆகவே நான் அழகில் சிறந்தவன். அதனால்தான் நமது நாட்டின் தேசியப் பறவையாகவும் இருக்கிறேன்" என்றது மயில்.

"ஓ... அதனால்தான் ஆணவத்தில் இப்படிப் பேசுகிறாயா? நானும் அழகுதான். என் குரலின் சிறப்பை பற்றிப் பாடாத கவிஞர்களே உலகில் இல்லை. ஆகவே நானே சிறந்தவன்" என்றது குயில்.

அதைக் கேட்டதும் கிளி கோபம் கொண்டது. "கரிய குயிலே வீண் பெருமை கொள்ளாதே. என்னை விட நீ அழகானவனா? இளம்பச்சை உடலில் சிவந்த மூக்கு. அழகு என்றாலே எல்லோருக்கும் என் நினைவுதான் வரும்" என்றது கிளி.

வண்ணத்துப்பூச்சி அவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது" "நீங்கள் மூவரும் உங்களை உயர்த்திப் பேசி சண்டையிடுவதைப் பார்த்தால் வேடிக்கையாக உள்ளது. எங்கள் இனத்தைப் பாருங்கள்.

இத்தனை சிறிய உடலில் எத்தனை வண்ணங்கள் கொட்டிக் கிடக்கின்றன! ஓவியனின் கை தேர்ந்த ஓவியம்போல என் மேனி உள்ளது. என்னை மறந்து விட்டு நீங்கள் தற்பெருமை பேசுவது மிகவும் அபத்தமானது" என்று மீண்டும் சிரித்தது.

அந்தப் பக்கம் வந்த நரி, சண்டையைக் கண்டது. "அடடே... இவர்கள் சண்டை போடுவதை சிங்கத்திடம் சொன்னால் போதும். ஒரு வழி பண்ணி விடுவார்" என்று நினைத்துக் கொண்டு ஓடியது.

ஒரு பெரிய மரத்தின் கீழ் சிங்கம் அமர்ந்திருக்க, மற்ற விலங்குகள் ஆவலுடன் காத்திருந்தன. மயில், கிளி, குயில், வண்ணத்துப்பூச்சி நான்கும் அமைதியாக நின்று கொண்டிருந்தன.

சிங்கம் பேச ஆரம்பித்தது. "நீங்கள் நால்வரும் நான்தான் பெரியவன் என்று சண்டையிட்டீர்களாமே. உண்மைதானா? உங்களில் யார் அழகு என்பதை நான் கண்டுபிடிக்கிறேன். மயிலே நான் சொல்லும்வரை நீ வெயிலில் நிற்க வேண்டும். குயிலே நீ ஒரு முள் செடியின் மீது அமர்ந்து கொள்ள வேண்டும். கிளியே, இதோ இந்தக் கனியை நீ பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் உண்ணக்கூடாது.

வண்ணத்துப்பூச்சியே, நீ அந்த மரத்தின் மேலே உள்ள பூக்களைச் சுற்றி சுற்றி வர வேண்டும். மறந்தும் கூட எந்தப் பூவிலும் தேன் எடுக்க அமர்ந்து விடக் கூடாது" என்றது.

சிங்கம் சொன்னபடியே நான்கும் செய்தன.

சிறிதுநேரம் கழித்து, "ராஜா, என்னால் வெயிலின் சூட்டைத் தாங்க முடியவில்லை. நிழலுக்கு வர அனுமதியுங்கள்" என்று மயில் கெஞ்சியது.

"மன்னா, பழத்தைக் கொத்தாமல் இருக்க இயலவில்லை. பழத்தை உண்ண உத்தரவிடுங்கள்" என்றது கிளி.

"சிங்கராஜா, முள் செடியில் அமர்ந்து என் கால்கள் வலிக்கின்றன. என்னை இதிலிருந்து விடுவியுங்கள்" என்று குயில் மன்றாடியது.

"வன ராஜா, என் சிறகுகள் வலிக்கின்றன. பூக்களில் தேன் குடிக்காவிட்டால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது" என்றது வண்ணத்துப்பூச்சி.

சிங்கம் இரக்கம் கொண்டது. "சரி, எல்லோரும் மரத்தடிக்கு வாருங்கள்" என்றதும் தண்டனையில் தப்பிவிட்ட மகிழ்ச்சியில் மர நிழலில் வந்து நின்றன.

"இப்போது உங்கள் அழகு உங்களுக்கு எந்த விதத்திலாவது உதவியதா? இல்லையே... மயிலுக்கு நிழல் தேவைப்பட்டது. கிளிக்குக் கனி தேவைப்பட்டது. குயிலுக்கு நல்ல இடம் தேவைப்பட்டது.

வண்ணத்துப்பூச்சிக்குத் தேன் தேவைப்பட்டது. இவை எல்லாவற்றையும் இந்த மரம்தான் தருகிறது. மரம் தன்னைப் பற்றி எப்போதாவது தற்பெருமை பேசியது உண்டா? பலருக்கு உதவும் மரம் அமைதியாக இருக்கிறது. ஆனால் நீங்கள் உங்கள் பெருமையைப் பேசி, கர்வம் கொள்கிறீர்கள். இந்த உண்மையை உணர்த்தவே நான் உங்களுக்குப் பரீட்சை வைத்தேன்" என்றது சிங்கம்.

"ராஜா, எங்களை மன்னித்து விடுங்கள். இனிமேல் எங்களைப் பற்றிப் பெருமை பேசுவதை விட்டு. மரங்களின் பெருமையையும் அதை வளர்க்க வேண்டிய அவசியத்தையும் பேசுவோம்" என்றது மயில்.

சிங்கத்தின் தீர்ப்பைக் கண்டு வியந்த விலங்குகளும் பறவைகளும் மனமாரப் பாராட்டிச் சென்றன.

## சுத்தம் பேணுவோம்!

சுத்தம் பேணனும் சுத்தம் பேணனும் கண்ணம்மா
அதை நித்தம் நாமும் செய்ய வேணும் கண்ணையா
அசுத்தம் சேர்ந்தா நோய் வருமே கண்ணம்மா
அத மாற்ற வேண்டும் நம் செயலால் கண்ணையா.

அசுத்த நீரால் நோய் வருமே கண்ணம்மா
அதை மேலாண்மை செய்ய வேணும் கண்ணையா
கழிவு நீரைச் சுத்தம் செய்து நாம் விட வேணும்
அதை மறுசுழற்சி செய்து நாம பயன்படுத்தனும்.

ஆறு கடல் ஏரியெல்லாம் காத்திட வேணும்
அதில் கழிவுநீர் கலக்காமல் தடுத்திட வேணும்
மழைநீர் தான் உயிர்நீரு மறக்கக் கூடாது
அதை மண்ணுக்குள்ள போக வழி செய்திட வேணும்.

வீணாகும் திடப்பொருளை குவிக்கக் கூடாது
நோய் தரும் திடக்கழிவை அழித்திட வேணும்
திடக்கழிவால் நீரும் நிலமும் கெட்டுப் போகுமே
அதை விட்டு வச்சா நோய் நொடிகள் வந்து சேருமே.

நெகிழிப் பையைக் கிட்ட நெருங்க விடவே கூடாது
மனிதன் மலம் திறந்த வெளியில் கழிக்கக் கூடாது
அழுகும் பொருளை திறந்த வெளியில் வீசக்கூடாது
அதை மண்ணில் புதைச்சு உரமாக மாற்றிட வேணும்.

சுத்தம் பேணனும் சுத்தம் பேணனும் கண்ணம்மா
அதை நித்தம் நாமும் செய்ய வேணும் கண்ணையா
அசுத்தம் சேர்ந்தா நோய் வருமே கண்ணம்மா
அதை மாற்ற வேண்டும் நம் செயலால் கண்ணையா !

## சிந்தனைகள்

❁ கிணற்றுக்கோ, ஏரிக்கோ ஏன் சமுத்திரத்திற்கோ கூட நீர் எடுத்துவரச் சென்றாலும் நம் கையில் இருக்கும் பாத்திரத்தின் அளவுக்குத் தான் தண்ணீரை எடுக்க முடியும். அதுபோல, நாம் செய்யும் செயலில் நம் முயற்சிக்கு தகுந்தவாறே பலன் கிடைக்கும்.

❁ தொடக்கத்தில் கறையான் சிறியதாகவே தோன்றும். சிறுகச்சிறுக பெருகி, நாளடைவில் மரக்கட்டை முழுவதுமே செல்லரித்துப் போகக் கூடும். அதுபோல, தீய சிந்தனைகள் சிறிதாகவே தொடங்கும். ஆனால், முடிவில் ஒருவனை முற்றிலும் அழித்துவிடும்.

❁ இன்று சாப்பிட்ட உணவை இன்றே ஜீரணம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவ்வுணவு அஜீரணம் ஆகிவிடும் அதுபோல ஒவ்வொரு நாளும் கேட்கின்ற நல்ல சிந்தனைகளை அன்றைக்கே நடைமுறைப்படுத்த முயலவேண்டும் இல்லாவிட்டால் அச்சிந்தனையைக் கேட்டதில் பயனில்லை.

❁ சேற்று நிலத்தை மெதுவாகப் பாயும் நீரோட்டத்தால் சரிசெய்ய முடியாது. அதுபோல ஆன்மீகத்தில் சாதனை செய்ய நினைத்தால் அரை மனதுடன் இறங்கக்கூடாது. கடவுளை அடைய வேண்டும் என்ற தணியாத ஆர்வமும் தீவிரமான மனநிலையும் தேவை.




❖1492 - ஸ்பெயினில் இருந்து யூதர்கள் கத்தோலிக்கர்களினால் வெளியேற்றப்பட்டனர்.

❖1858 - இலங்கை தொடருந்து சேவையை ஆளுநர் சேர் ஹென்றி வோர்ட் ஆரம்பித்து வைத்தார்.

❖1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி பிரான்சுடன் போர் தொடுத்தது.

❖ 1949 - தேசிய கூடைப்பந்து சங்கம் ஐக்கிய அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.

❖1960 - நைஜர் பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.

❖1975 - மொரோக்கோவில் விமானம் மலை ஒன்றுடன் மோதியதில் 188 பேர் கொல்லப்பட்டனர்.

❖1976 - காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

❖1990 - காத்தான்குடித் தாக்குதல் 1990: கிழக்கிலங்கையில் காத்தான்குடியில் முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் பெண்கள், குழந்தைகள் உட்பட 103 பேர் கொல்லப்பட்டனர்.

❖2006 - திருகோணமலை தோப்பூர் அல் நூராப் பாடசாலையில் தங்கியிருந்த அப்பாவிப் பொதுமக்கள் 12 பேர் எறிகணை வீச்சில் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

❖1347 - அலாவுதின் பாமன் சா, பாமினிப் பேரரசின் சுல்தான் (இ. 1358)

❖1869 - இவான் இவானோவிச் செகால்கின், ருஷியக் கணிதவியலாளர் (இ. 1947)

❖1886 - மைதிலி சரண் குப்த், இந்தியக் கவிஞர், எழுத்தாளர் (இ. 1964)

❖1890 - ஸ்ரீ பிரகாசா, விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (இ. 1971)

❖1923 - தோர்ப்சான் சிக்கிலேண்டு, நோர்வே வேதியியலாளர் (இ. 2014)

❖1945 - வாணிஸ்ரீ, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

❖1948 - வே.ம.அருச்சுணன், மலேசியத் தமிழ் எழுத்தாளர்

❖1950 - ஆறு. இராமநாதன், தமிழக எழுத்தாளர்

❖1979 - இவாஞ்சலீன் லில்லி, கனேடிய நடிகை

❖1984 - சுனில் சேத்ரி, இந்தியக் கால்பந்தாட்ட வீரர்

### இறப்புக்கள்

❖1957 - தேவதாஸ் காந்தி, இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி. 1900)

❖1975 - என்.வி.நடராசன், தமிழக அரசியல்வாதி (பி. 1912)

❖1993 - சுவாமி சின்மயானந்தா, வேதாந்த தத்துவத்தைப் பரப்பிய இந்திய ஆன்மீகவாதி(பி. 1916)

### சிறப்பு நாள்

❖விடுதலை நாள் (நைஜர் பிரான்சிடம் இருந்து 1960)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 70 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 340 | 280 | 400 | 400 |
| தக்காளி | 120 | 120 | 110 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 160 | 180 | 100 | 160 | 200 |
| கரட் | 200 | 300 | 120 | 300 | 350 |
| பூசணி | 80 | 70 | 40 | 80 | 100 |
| புடோல் | 60 | 80 | 60 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 100 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 90 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 110 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 50 | 40 | 80 | 40 |
| லீக்ஸ் | 200 | 160 | 100 | 160 | 200 |
| பீற்றூட் | 150 | 160 | 90 | 160 | 120 |
| கறிமிளகாய் | 200 | 280 | 200 | 240 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 80 | 30 |
| போஞ்சி | 250 | 200 | 120 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 50 | 80 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 10 |
| தேசிக்காய் | 30 | 50 | 40 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40-60 | 30-60 |
| இராசவள்ளி | 140 | 140 | 130 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 100 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 40 | 40 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | 130 | 40 | 40 |

அநேகர் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தை பிறரை அவலத்துக்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.
– லா புரூயா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## மணல் தட்டுப்பாடு தீராத வியாதியோ?

யானைக்குத் தந்தம் பெறுமதியாயினும் அதுவே அதற்கு ஆபத்தையும் கொடுக்கிறது.

அந்த ஆபத்து இரண்டு வகையில் ஏற்படுகிறது. அதில் ஒன்று தந்தத்தை விரும்புகின்றவர்கள் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக யானையை அழிக்க முற்படுவது.

இரண்டாவது யானையின் இரண்டு தந்தங்களும் வளர்ந்து வளர்ந்து ஒன்றை ஒன்று குறுக்குமுகமாக அடைத்துக் கொள்ளும்.

இதனால் தந்தங்களுக்குள் அகப்பட்ட துதிக்கையை உயரத் தூக்க முடியாமல் யானை தவிக்கும்.

இந்த நிலைமை யானைக்கு உணவு இல்லை என்பதாக அமைந்துவிட, அதுவே யானையின் தேகவியோகத்துக்குக் காரணமாகி விடுகிறது.

இதுவே யானையின் விதி என்றால் எங்கள் தமிழ் மக்களுக்கு ஒரு தலைவிதி இருக்கிறது. அதுதான் மண் தொடர்பான தலைவிதி. வாழ்வதற்கும் ஆள்வதற்கும் எங்கள் மண்ணை தர சிங்கள அரசுகள் மறுக்கின்றன.

நாங்கள் வாழ்ந்த மண்ணை ஆக்கிரமிப்புச் செய்துள்ள படையினர் அதனை விட்டுவிடப் போவதில்லை என்று அடம்பிடிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் மண்ணை தமதாக்குவதில் முஸ்லிம் மக்கள் மும்முரமாக ஈடுபட்டு இருக்கின்றனர்.

இதுதவிர மலையகத்தில் மண்சரிவினால் எங்கள் மலையகத் தமிழ் உறவுகள் சதா துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

இதுதான் என்றால், வடபுலத்தில் கட்டிடங்களை கட்டுவதற்கு மண் பெரும் பிரச்சினையாக உள்ளது.

கட்டுமானத்துக்கு தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில், கறுப்புச்சந்தையில் மண்ணைக் கொள்வனவு செய்ய வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறது.

இதனால் அதிகூடிய விலையை மண்ணுக்காகக் கொடுக்க வேண்டியுள்ளதுடன் அவ்வாறு வாங்கப்படும் மண் கட்டுமானத்துக்கு உகந்ததா? அதனைக் கொண்டு கட்டப்படும் கட்டிடங்களின் தரமும் உறுதித்தன்மையும் நிலைத்த தன்மையும் கொண்டதா? என்ற பல கேள்விகள் எழுகின்றன.

இவை ஒருபுறமிருக்க; மண்விநியோகமும் சீராக இடம்பெறாததால் கள்ள மண் ஏற்றுகின்ற சூழ்நிலை உருவாகிறது.

கள்ள மண் ஏற்றப்படுவதால், அந்த மண் எடுக்கப்படுகின்ற பகுதிகளும் அதற்கு உரித்தான மக்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

இதற்கும் மேலாக சட்டவிரோதமாக மண் ஏற்றுவது பிடிபட்டால், சம்பந்தப்பட்ட வாகனம் பறிமுதலாவதுடன் அதன் உரிமையாளர் தண்டம் செலுத்துகின்ற சூழ்நிலைக்கு உட்படுவார். இதனால் அந்தக் குடும்பம் நிர்க்கதிக்கு உள்ளாகிறது.

ஆக, இவை அனைத்துக்கும் மூலகாரணம் மண் விநியோகத்தை சீராக வழங்காமை ஆகும்.

கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணை சீராக விநியோகிக்க முடியாமைக்கான காரணம் என்ன என்பதை இன்றுவரை எந்த உயர் அதிகாரியும் வெளிப்படுத்தவில்லை.

வடபுலத்தில் மண்ணை எடுப்பது கடினமென்றால் மாற்றுவழி பற்றிச் சிந்திக்க வேண்டும். இல்லையேல் யானைக்குத் தந்தம் போல தமிழ் மக்களுக்கு மணல் என்பதுதான் விதியாகும்

# தேசியக் கொடியை ஏற்ற மறுத்தமை தொடர்பில் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனுக்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை ஒன்றில் தேசியக் கொடி ஏற்ற மறுத்தமை தொடர்பான விசாரணை மேற்கொள்வதற்காக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனுக்கு பயங்கரவாத தடுப்புப்பிரிவினரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வவுனியா ஈரப்பெரியகுளம் பாடசாலையில் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் இலங்கை தேசியக் கொடியை ஏற்ற மறுத்தமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்து கடந்த 20ஆம் திகதி கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப்பிரின் தலைமையகத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

தனிப்பட்ட காரணத்தினால் அவர் அன்று செல்ல முடியவில்லை. அதை அடுத்து வேறு ஒரு தினம் வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் குறித்த விசாரணைக்கான அழைப்பாணையை பயங்கரவாத தடுப்புப்பிரிவின் யாழ் பிராந்திய அதிகாரிகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் அலுவலகத்துக்கு நேற்று சென்று இன்று கொழும்புக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

இன்று வேறு நிகழ்வுகள் இருப்பதால் எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். (ம-9)

# வலம்புரியின் செய்திக்கு மாநகர ஆணையாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த முதலாம் திகதி வலம்புரி நாளிதழின் முன் பக்கத்தில், யாழ்.மாநகர முதல்வரின் சலுகை தொடர்பாக உறுப்பினர்கள் நீண்ட விவாதம் என்ற செய்தி தொடர்பில், யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தன்னிலை விளக்கமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாநகர முதல்வருக்குரிய உத்தியோகபூர்வ வாகனம் அவருக்கு குறித்து ஒதுக்கப்பட்டது.

கொழும்பு போன்ற தூர இடங்களுக்கான பயணங்களின்போது மாகாண உள்ளூராட்சி அமைச்சின் அனுமதி பெற்ற உத்தியோகபூர்வ பயணங்களுக்கே வாகனத்துக்கான எரிபொருள் கொடுப்பனவு மற்றும் சாரதிக்குரிய படிகள் என்பன வழங்கப்பட முடியும்.

முதல்வர் அவர்கள் 2018.07.23ஆம் திகதி அதிகாலை வெளிநாட்டில் இருந்து திரும்புகிறார் என்ற நிலையில் இவ்விடயம் தொடர்பாக வெளிநாட்டில் இருந்த முதல்வருடனும் உள்ளூராட்சி ஆணையாளருடனும் கலந்துரையாடிய தன் அடிப்படையில் 2018.07.22ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணியளவில் முதல்வரது குறித்தொதுக்கப்பட்ட வாகனத்தை அவரை ஏற்றி வருவதற்காக அனுப்புமாறு உரிய அறிவுறுத்தல்கள் குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது என்பதை செயலாளர் அறியத் தந்துள்ளார் என்பதை தெரியப்படுத்துகிறேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### கனவுகள்

ஏதாவதொன்று நம்பமுடியாத அளவிற்கு அழகாக அல்லது மகிழ்ச்சி தருவதாக இருக்கும் போது இது ஒரு கனவாக இருக்குமோ என நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள். எதை நீங்கள் உண்மையாக உணருகிறீர்களோ அது மகிழ்ச்சியைத் தருவதில்லை.

துன்பம் இருக்கும்போது இது ஒரு கனவா அல்லது நினைவா என நீங்கள் என்றைக்கும் ஆச்சரியப்படுவதில்லை. அத்துன்பம் உண்மையாக உள்ளது என்று நீங்கள் உறுதி செய்கிறீர்கள்.

இதுதான் உண்மையைப் பொய் என்றும் பொய்யை உண்மை என்றும் அறிதல் ஆகும். உண்மையில் எல்லாத் துன்பங்களும் பொய்யே. அறிவாளி மகிழ்ச்சி உண்மையானது எனவும் மகிழ்ச்சி உங்களுடைய இயல்புகளில் ஒன்று எனவும் அறிகிறான். துன்பம், பொய். ஏனெனில் அது நினைவாற்றலை மாத்திரம் புண்படுத்துகிறது. மகிழ்ச்சி, துன்பம் இவை இரண்டையுமே நீங்கள் கனவாகப் பார்க்க முடியும் போது நீங்கள் உங்களுடைய உண்மையான ஆன்மாவில் வாழ்கிறீர்கள்.

பாயல்: கெட்ட கனவுகள் பற்றி கருத்து என்ன?

ஸ்ரீஸ்ரீ: நீங்கள் கனவு காணும் போது மாத்திரமே ஒரு கெட்ட கனவானது உண்மையே எனத் தவறாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

உங்களுடைய விழிப்பு எனும் உண்மையை ஒரு கனவா என ஆச்சரியப்பட்டுக் கொண்டிருங்கள். அப்போது உண்மையைக் காண நீங்கள் விழிப்பீர்கள்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஆடி வெள்ளியன்று விரதம் இருப்பதனால் பயன் என்ன?

ஆடி மாதத்தில் வரும் முதல் வெள்ளிக்கிழமை இன்று. ஆடி மாதம் என்றாலே அது அம்மனுக்குரிய மாதம் என்பார்கள்.

எத்தனை வெள்ளிக்கிழமைகள் வந்தாலும் ஆடி வெள்ளிக்கு என்று ஒரு தனிப்பெருமை உண்டு.

சூரியன் கடகத்தில் சஞ்சரிக்கும் மாதமான ஆடி மாதம் இறைவியை நாடிச் சென்றவர்களுக்கெல்லாம் கோடி கோடியாய் நற்பலன்கள் கொடுக்கும் மாதமாகக் கருதப்படுகின்றது

ஆடி வெள்ளியன்று விரதம் இருப்பதனால் கோடி பயன் என்று நம் முன்னோர்கள் அடிக்கடி கூறுவார்கள். இன்று விரதம் இருந்தால் என்ன என்ன பயன் என்று பார்ப்போம்.

ஆடி வெள்ளியன்று குத்துவிளக்கு பூஜை செய்து சுமங்கலிப் பெண்களுக்கு ரவிக்கைத்துணி, தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, மஞ்சள், குங்குமம் வைத்துக் கொடுத்தால் நற்பலன்கள் வந்து சேரும். இல்லத்தில் மங்கலம் உண்டாகும்.

சகல சவுபாக்கியங்களையும் அள்ளி தரும் ஆடி வெள்ளி வழிபாட்டின் மூலம் சுமங்கலி பெண்களின் கணவர் ஆயுள் கூடும், மணமாகாத பெண்களுக்கு திருமண பாக்கியம் கைகூடும்.

மணமாகி குழந்தையில்லாத தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். வறுமை நீங்கி செல்வம் தழைத்தோங்கும்.

ஆடி வெள்ளிக்கிழமைகளில் நமது வீட்டில் அம்மன் வழிபாடு மேற்கொள்வது முதல், விரதமிருந்து காவடி எடுப்பது, பொங்கல் வைப்பது, ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு யாகங்களில் கலந்து கொள்வது போன்றவை நடைபெறும்.

ஆடி வெள்ளியன்று துர்க்கையம்மனை ராகு காலத்தில் எலுமிச்சை விளக்கு ஏற்றி வழிபாடு செய்வதனால் மணமாகாத கன்னி பெண்களுக்கு நல்ல வரன் கிடைக்கும்.

துன்பம் விலகும். எதிரிகள் தொல்லை ஒழியும்.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### அன்பளிப்பு கொடுங்கள்

✦ ஒருவரைப் பார்த்து ஒருவர் பொறாமை கொள்ள வேண்டாம்.

✦ வெட்கம் நன்மைகளை இழுத்து வரும். உனக்கு வெட்கம் இல்லையாயின் உனது இஷ்டம் போல நடந்து கொள்.

✦ இறைவன் ஒரு மனிதனை அழித்துவிட நாடுவானேயானால் அவனிடமிருந்து வெட்கத்தைப் பறித்து விடுகிறான்.

✦ நண்பர்களை ஓரளவு விரும்புங்கள். ஒருநாள் அவர்கள் விரோதிகளாக கூடும். விரோதிகளை அதிகமாக வெறுக்காதீர்கள். ஒருநாள் அவர்கள் தோழராகக் கூடும்.

✦ உங்களுக்குள் அன்பளிப்புகளை பரிமாறிக் கொள்ளுங்கள். அன்பளிப்புகளை கொடுப்பது மனதிலுள்ள பொறாமைகளை அழித்து விடுகின்றது.

✦ கெட்டவர்களுடன் தோழமை கொள்ளாதே. அவர்களுடன் தோழமை கொண்டால் அவர்களின் கணக்கில் உன்னையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

✦ எவர் தம் சகோதரரிடம் ஒரு வருடம் பேசாமல் இருக்கின்றாரோ, அவர் அந்த சகோதரரை கொலை செய்ததற்கு ஒப்பாகும்.

### யாழ். மத்திய கல்லூரி நிறுவுநர் நாள் வெற்றிக்கிண்ணம்

# சம்பியன் பட்டத்தை வென்று அசத்தியது யூனியன் கல்லூரி பழைய மாணவர் அணி







யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 202ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு யாழ்.மத்திய கல்லூரி நிறுவுநர் நாள் வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. யாழ். மாவட்டத்தின் 14 பாடசாலைகளை சேர்ந்த பழைய மாணவர்கள் பங்கு பற்றிய போட்டியில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் துடுப்பாட்ட அணி மகுடம் சூடியது.

இதில் அரையிறுதிப் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரியை இரண்டு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றும் இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியையும் எதிர் கொண்டது.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 50 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது. 51 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி பழைய மாணவர் அணி சுயந்தனின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க விக்கெட் இழப்பின்றி வெற்றியை பெற்று யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுநர் நாள் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (க)

## மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற லீக் சுற்றின், 41 ஆவது போட்டியில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து மாதோட்டம் எப்.சி அணி மோதியது.

போட்டியின் 3 ஆவது மற்றும் 22 ஆம் நிமிடங்களில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியின் அபினாஸ் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டார். தொடர்ந்து, 47 ஆவது நிமிடத்தில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியின், டெரிஸ்ரன் பீற்றர்ஸ் கோல் ஒன்றை அடித்தார்.

அதுவரையில் பொறுமை காத்த மாதோட்டம் எப்.சி அணி, 62 ஆவது நிமிடத்தில் முதலாவது பதில் கோலை அடித்தது. அதனை அவ்வணியின் திலீபன் அடித்தார். இருந்தும், விடாது ஆடிய சுப்பர் கிங்ஸ் அணி, 73 ஆவது நிமிடத்தில் மேலுமொரு கோலைப் போட்டது.

அந்தக் கோலையும் டெரிஸ்ரன் பீற்றர்ஸ் போட்டார்.

82 ஆவது நிமிடத்தில் மாதோட்டம் அணி, இரண்டாவது பதில் கோலைப் போட்டது.

அந்தக் கோலை செயன் அடித்தார். ஆட்டத்தின் மேலதிக நிமிடத்தில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியின் தர்சிகன் கோல் ஒன்றை அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

முடிவில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணி, 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

## பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றி

, இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து நடத்தும், பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது தற்போது நடைபெற்று வருகின்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

45 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கே.றம்மிநாதன் 24 ஓட்டங்களையும், எஸ்.பக்ஸன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ரி.விதுசன் 3 விக்கெட்களையும், ஆர். இயலரசன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 45 ஓவர்களில் 7 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

ஆர்.ராஜ்கிளிண்டன் 28 ஓட்டங்களையும், கே.இயலரசன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் அணிசார்பாக, றெனோல்டோ 3 விக்கெட்களையும், டிலக்சன், றெமிஸ்ரன் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

## தமிழ் யுனைட்டட் - மன்னார் எப்.சி. அணி போட்டி சமநிலையில்

வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு,-கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

27 ஆம் திகதி நடைபெற்ற லீக் சுற்றின், 38 ஆவது போட்டியில் தமிழ் யுனைட்டட் அணியை எதிர்த்து மன்னார் எப்.சி அணி மோதியது.

போட்டி தொடங்கி 4 ஆவது நிமிடத்தில் மன்னார் எப்.சி அணியின் டிலக்சன் முதலாவது கோலை அடித்தார்.

அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் 11 ஆவது நிமிடத்தில் தமிழ் யுனைட்டட் அணியின் ஜக்ஸன் கோல் அடித்தார். அதே உத்வேகத்துடன் ஆடிய தமிழ் யுனைட்டட் அணி, 23 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்தது. அந்தக் கோலை இசாக் பெற்றுக் கொடுத்தார்.

முதற்பாதியாட்டத்தின் இறுதி நிமிடத்தில் மன்னார் எப்.சி அணியின் இசாதீன் கோல் ஒன்றை அடித்து ஆட்டத்தை சமநிலைப் படுத்தினார்.

இரண்டாவது பாதியாட்டத்தில் மேலதிக எவ்வித கோல்களும் பதிவு செய்யப்படவில்லை. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தமையால், ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (க-26)







அகில இலங்கை ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 22 திகதி சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்குகொண்ட எஸ்.எஸ். கே.எ.கராத்தே கழகத்தின் விஜயராஜ் நிவேதன் 14 - 15 வயதுப் பிரிவு கறுப்புப் பட்டிக்கான குமித்தே போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றார். (க)

## கட்சி பதவியிலிருந்து...

கட்டுப்படுத்தி காட்டுவேன் என வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கேள்வி பதிலிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு.

**கேள்வி:**எதிர்க்கட்சித் தலைவர் தவராசா அவர்கள் மாகாண சபையை நடத்த வலுவற்ற முதல்வர் வடக்கில் வன்முறையை எப்படி அடக்குவார் என்று கேட்டுள்ளார். உங்கள் பதில் என்ன?.

**பதில்:** தன் கட்சி தன்னை எதிர்க்கட்சிப் பதவியில் இருந்து நீக்கியும் அவர் தொடர்ந்து அந்தப் பதவியில் இருக்கின்றாரே அது போல் தான் முடியாது என்று எதுவும் இல்லை. பொலிசாருடனும் நீதியுடனும் தொடர்புடையவன் நான். குற்றவாளிகள் சம்பந்தமாக தொழில் ரீதியாக நான்பல வருடகாலம் செயற்பட்டவன். இப்பொழுது கூட பல தடயங்கள் எனக்குத் தரப்பட்டுள்ளன. ஆனால் வேலிகள் பயிரை மேய விடக்கூடாது. சட்ட ஒழுங்கு எனக்குப் பரீட்சயமான ஒரு துறை. ஆனால் அதற்கு அதிகாரம் கையில் இருக்க வேண்டும். அதிகாரம் கையில் இல்லாமல் எம்மால் செயலாற்ற முடியாது.

எமது அதிகாரங்களை மற்றவர்கள் மடக்கிப் பிடித்ததால்தான் நாங்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளோம்.

எதிர்க்கட்சித் தலைவர் மாகாணசபை சட்டத்தில் உள்ள அதிகாரங்களை மட்டும் படித்துவிட்டு பத்திரிகைகளுக்கு ஒப்புவித்தால் அது போதாது. மற்றைய சட்டங்கள் எவ்வாறு மாகாணசபையை வளைத்துப் பிடித்து செயலற்றதாக்கின்றன என்பதையும் அவர் உணர வேண்டும். உதாரணத்திற்கு உள்ளூராட்சியின் முன்னேற்றம் நகர் அபிவிருத்தி அதிகார சபையால் கட்டுப்படுத்தப்படுகிறது.

காணிகள் மீது எமக்கிருக்கும் உரித்துக்களை மகாவலிச் சட்டம் நலிவடையச் செய்துள்ளது.

மாகாணப் பாடசாலைகளின் முன்னேற்றங்கள் தேசிய பாடசாலைகளை வைத்து அவற்றுள் உள்நுழைந்து கட்டுப்படுத்தப்படுகின்றன.

எமது வைத்தியசாலைகளின் முன்னேற்றம் தேசிய வைத்தியசாலைகள் ஊடாக மத்திய அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன. சுகாதார அதிகாரியின் நிர்வாகம் கூட மாகாணத்திற்கு வழங்கப்படவில்லை.

மாகாணப் பொது நிர்வாகம் கூட ஆளுநரின் நிறைவேற்று அதிகாரங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதிருந்த தவராசா வானம் ஏறி அவைத்தலைவர் ஆசியினால்வைகுண்டத்திலேயே இப்பொழுது காலம் கழிக்கின்றார் என்பதை மறந்து விட்டார்.

நண்பருக்கு தெரிந்தவை பற்றி அல்லது அவருக்கு வேண்டியவை பற்றி அவர் பேசுகிறார். அவை அவருக்குக் கிடைக்காததால் எம் மீது கோபம் கொள்கின்றார். முழு வட மாகாண நிர்வாகத்திலும் அவருக்கு நன்மை தரும் விடயங்களைத்தான் நாங்கள் இதுகாறும் கவனித்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார். அவை செய்யப்படாவிட்டால் எமது செயற்பாடு செயற்றிறம் அற்றது என்கிறார்.

தப்பித்தவறி அவர் முதலமைச்சராக வந்தால் (கடவுள் அதனைத்தடை செய்வாராக!) அவ்வாறான நடவடிக்கைகளில் தான் ஈடுபடுவார் என்று தெரிகின்றது. அபிவிருத்தித் திட்டங்களை நான் தான் இங்கு கொண்டு வந்துவிட்டேன் என்று மார்தட்டிக்கூறி அரியாசனத்தில் இருப்போரின் அடியை ஆசையுடன் பற்றிச் செயற்படுவார் போல் தெரிகின்றது. உரிமைகள் இல்லாமல் உதவியை நாடுவது எம் உருக்குலைவுக்கு வழிவகுக்கும்.

அவர் அடுத்த தேர்தலில் தமக்கு வழி அமைக்க என்னைச் சீண்டுகின்றார். முதலில் தனக்கு வாக்களிக்கப் போகும் மக்களிடம் சென்று அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றட்டும் அவர்கள் நன்மதிப்பைப் பெறட்டும். என்னுடன் மோதி மக்களின் நன்மதிப்பைப் பெறலாம் என்று அவர் நினைத்தால் அது அவரின் பகல் கனவாகும்!

கூரை மேல் ஏறி குறை கூறி பிழை பிடிப்பவர் எப்பொழுதும் குதர்க்கமாகவே பேசுவார். நாம் எதுவும் செய்ய முடியாது என தெரி விக்கப்பட்டுள்ளது. (ம)

## வடக்கில் கடன்களை...

குழுவை ஈடுபடுத்தி வருவது குறித்து தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். தனியார் நிதி நிறுவனங்களே இந்த நுண் கடன்களை வழங்கி வருகின்றன.

குறிப்பாக வடக்கிலும் அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் 70 வீத மானவர்கள் இந்த நுண் கடனை பெற்றுள்ளனர். இந்த கடன்களுக்கு 40 வீதத்தில் இருந்து 200 வீதம் வரையில் அநீதியான வட்டி அறவிடப்பட்டுள்ளது.

விசேடமாக வடக்கு, கிழக்கில் வறுமையில் உள்ள மக்களுக்கு அடகு வைக்க காணிகள், சொத்துக்கள் இல்லாத காரணத்தினால், வங்கிகள் மூலம் கடன்களை பெற முடியாதுள்ளது.

நுண் கடன் நிறுவனங்களிடம் இலகுவாக கடனை பெற முடியும் என்பதால், மக்கள் கடன்களை பெற்றுக்கொண்டுள்ளனர். கடனை செலுத்த முடியாத பெண்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

இதனால், நுண் கடன்களை வழங்கும் நிறுவனங்களை வரையறுக்கவும், வட்டி வீதங்களை நிர்ணயிக்கவும் தீர்மானங்களை எடுத்துள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (ம)

## யாழில் விசேட...

போது இதுவரை 11 பேரை கைது செய்துள்ளதாக வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரொஷான் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் சுன்னாகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களிடமிருந்து நான்கு மோட்டார் சைக்கிள்களையும் மீட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தொடர்ந்தும் யாழ்.மாவட்டத்தில் வன்முறைகளை கட்டுப்படுத்த ரோந்து நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## 130 கிலோ கஞ்சாவுடன்...

பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கேரள கஞ்சா மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் போதைப்பொருள் ஒழிப்பு அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## குள்ள மனிதர்கள்....

பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று இரவு 7.00 மணியளவில் வட்டுக்கோட்டை முதலி கோவிலடியிலுள்ள வீட்டுக்குள் உள்நுழைந்த குள்ள மனிதர்கள்அந்த வீட்டின் மீது சரமாரியான கல்வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். வீட்டுக்காரர் வெளியே வந்து பார்த்த போது அவர்கள் தப்பித்து ஓடியுள்ளனர். இதே போன்று வட்டுக்கோட்டை முதலிகோவில் பகுதியில் உள்ள ஏனைய வீடுகளிலும் குள்ள மனிதர்களின் அச்சுறுத்தல் இருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் அச்சம் நிலவுவதாகவும் வீட்டிற்கு வெளியே வரமுடியாத நிலை காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-78)

## அரசுக்கு எதிராக...

யேற்றுவோம் எனும் தொனிப்பொருளில் ஒன்றிணைந்த எதிரணியினர் அரசாங்கத்திற்கு எதிராக நேற்று வியாழக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ம)

## இனப் பிரச்சினை...

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் வடக்கில் முன்னெடுக்கும் செயற்திட்டங்கள் மற்றும் புதிய கடன் திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அந்த அலுவலகத்தின் தலைவியான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள், வங்கி அதிகாரிகளைச் சந்தித்து அவர் கலந்துரையாடினார்.

தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா,

"என்னுடைய ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காணும் நோக்கில் ஒரு திட்டத்தை கொண்டு வந்திருந்தேன். அதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் என் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியிருந்தும் நான் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண வேண்டுமென்பதற்காக நீண்டதொரு நடவடிக்கையை எடுத்திருந்தேன்.

அவ்வாறு எடுத்த முயற்சியின் பலனாக ஒரு தீர்வுத் திட்டத்தை நான் கொண்டு வந்த போதிலும் அதனைக் குழப்ப வேண்டுமென்பதற்காக வெறும் ஏழு வாக்குகளால் அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டிருந்தது.

அந்தக் காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு கட்சி கொண்டு வந்தால் மற்றக் கட்சி எதிர்க்கின்ற நிலையே இருந்தது. அதுவே என்னுடைய காலத்திலும் நடைபெற்றது.

அதனால் என்னுடைய செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்க முடியவில்லை. ஆனால் இன்றைக்கு நல்லதொரு சந்தரப்பம் கிடைத்திருக்கிறது. அதாவது இந்த நாட்டின் இரு பிரதான தேசிய கட்சிகளும் இணைந்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றன.

அவ்வாறு இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஆட்சியில் அரசியல் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதிலும் அந்த நடவடிக்கைகளுக்கு தற்போது ஜே.வி.பியும் ஆதரவளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆகையினால் இதுவொரு நல்ல சந்தர்ப்பமாகவே காணப்படுகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்தியே அதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனால் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியும்.

அந்த முயற்சிக்கு நான் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன் என்று தெரிவித்தார். (ம-9,10)

## மேலிருந்து கீழே...

தம்பையா (வயது 72) என்பவரே மேற்படி உயிரிழந்தவரவார்.

இவர் ஆடு மாடு வளர்த்து வருகிறார். வழமைபோல் குழை பறிப்பதற்கு நேற்று காலை ஏணியில் ஏறியுள்ளார். கால் தடுக்கி கீழே விழுந்துள்ளார். உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் அங்கு சிகிச்சை பெற்ற அவர் சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## தேர்தல்கள் ஆணைக்குழு...

ணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க இதனை குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டில் தற்போது நாளுக்கு நாள் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. உலகிலுள்ள எந்தவொரு அரசாங்கமும் மேற்கொள்ளாத வகையில் இலங்கை அரசாங்கம் மக்களை பழிவாங்கும் விதமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

## மாகாண சபைத்...

தும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு (பெப்ரல்) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் ஜனவரி மாதம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதானால், கடந்த பெப்ரவரி உள்ளூராட்சி தேர்தல்களின் போது கடைப்பிடிக்கப்பட்ட கலப்பு தேர்தல் முறையிலேயே தேர்தலை நடத்த வேண்டும் என் மேலும் தெரிவித்துள்ளார். (ம)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும், உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2.சொந்த கையெழுத்தில் எழுதப்படும் விண்ணப்பத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்

விண்ணப்பதாரியின் முழுப்பெயர் -
முகவரி -
பிறந்த திகதி -
கல்வித்தகைமை -
தேசிய அடையாள அட்டை இலக்கம் -
தொலைபேசி இலக்கம் -

3.பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் உட்பட இரு நற்சான்றிதழ்கள், வதிவிடச்சான்றிதழ் ஆகியவற்றின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

4.நடுக்கட்டல் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்படுபவர் முற்றிலும் தரகு அடிப்படையிலான (கொமிஷன்) கொடுப்பனவைப் பெறும் வகையில் நியமிக்கப்படுவார்.

5.நியமனம் பெறும் நடுக்கட்டல் உத்தியோகத்தர் ரொக்கப்பிணைப் பணமாக ரூபா ஐயாயிரம் (5000.00) இனை அலுவலகத்தில் மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

6.கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 2018.08.17 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

7.மேற்குறித்த பதவிக்கான நியமனம் பெறுவோர் நிரந்தர நியமனம் பெறுவதற்கோ அல்லது கோருவதற்கோ உரித்துடையவர்கள் அல்லர்.

8.நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானம் தவிசாளர் / செயலாளரால் மேற்கொள்ளப்படும்.

தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம். (சி-3412)


### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2018/08/02 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3715 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| C | 0 | 5 | 8 | 6 | 1 | 5 |

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.08.02 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1839 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| F | 03 | 05 | 07 | 47 |

தேசிய லொத்தர் சபை

### வாசனா சம்பத

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1503 | திகதி | 2018/08/02 |

J K V

| வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இலக்கம் |
|---|---|---|---|---|
| 09 | 24 | 40 | 68 | 55 |

தேசிய லொத்தர் சபை

### நீரோகா

| | |
|---|---|
| திகதி | 2018/08/02 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 428 |

| லக்கினம | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இலக்கம் |
|---|---|---|---|---|---|
| சிம்மம் | 08 | 18 | 25 | 41 | 47 |

தேசிய லொத்தர் சபை

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

(C-3398)

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 1Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

3-5 வேலை நாட்களில்

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமையில்)

Hotline -0777554528

**வேலை வாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள சர்வதேச நிறுவனத்தின் 3 ஆவது கிளைகளுக்கு வேலையாட்கள் தேவை. பயிற்சியளிக்கப்பட்டு உள்வாங்கப்படுவர். பயிற்சி காலத்தில் ஆரம்ப சம்பளமாக 15,000 - 20,000 பின் நிரந்தரமாக்கலுடன் 45,000 - 60,000 வரை அடிப்படைச்சம்பளம் வழங்கப்படும்.

- ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- தகைமை : G.C.E O/L, A/L
- வயதெல்லை : 18 - 30
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு – 076 676 7620

(C-5252)

**New Sky Computer TRAINING CENTRE**

**சிங்களம்** பாடசாலை மாணவர்களிற்கான அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

**கணினி** MS Office 2016, Internet & E-mail, Graphic Design, DTP, Kids Pro, Web Design.

021-221-5992

நல்லூர், யாழ்ப்பாணம்

(C-3418)

# Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

## A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2020 இல் அனைத்துப் பாடசாலைகளிலும் முதல் நிலையில் காணப்படும் எமது மாணவர்கள்

| | |
|---|---|
| சதுர்சாயினி | - J/MHC |
| ஜெனந்தன் | - J/SVC |
| டீபிகா | - J/JHLC |
| விதுர்சன் | - J/JCC |
| மதுசன் | - J/JHC |
| விதுர்சன் | - J/PSC |

**A/L 2019**

| | |
|---|---|
| சந்துயா | - J/MHC |
| லாவண்யா | - J/KHC |
| ஜெனுசன் | - J/SVC |
| ஜெனார்த்தனி | - J/SVC |
| ஜெயந்தன் | - J/MHC |

A/L 2020 மாணவர்களுக்கான புதிய பிரிவு - 04.08.2018

A/L 2019 மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு - 04.08.2018

0770175346

(C-3420)

எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

**வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

- அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
- அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

# அருள்

சாவகச்சேரி
இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடி
இல. 01 வெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576

கிளிநொச்சி
இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
(வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்)
076 443 1576

(C-3389)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

# A/L வரலாறு

By:S.பிரபா

Paper Class

ஆரம்பம் : 06.08.2018 10am

A/L 2019 } புதிய பிரிவு
A/L 2020 } சனி, ஞாயிறு

தரன் கல்வியியற் கல்லூரி மருதடிச்சந்தி, மானிப்பாய்

(5248)


# நீங்கள் செய்தியாளர்களாக விரும்புகிறீர்களா?

**உங்களின் விருப்பத்தை நிறைவேற்ற உங்கள் வலம்புரி நாளிதழ் தயாராக இருக்கிறது**

- உங்களுக்கு தெரிந்த செய்திகள்
- நேரில் கண்ட சம்பவங்களின் புகைப்படங்கள்
- நீங்கள் அறிந்த கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள்
- வேலைவாய்ப்புகள்
- உயர் பட்டப்படிப்புகளுக்கான புலமைப் பரிசில்கள்
- இன்னும் பற்பல செய்திகள் தகவல்கள் மக்களை சென்றடைய

வலம்புரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்

தொலைபேசி இலக்கம் - 021 567 1541 / 070 220 2206

Viber - 076 636 3378

தொலைநகல் - 021 222 7829

இ.மெயில் - valampuriijaffna@gmail.com


**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

| | |
|---|---|
| UK- 550 | /=Kg |
| கனடா-900 | /=Kg |
| ஜேர்மனி- 700 | /=Kg |
| நெதர்லாந்து-700 | /=Kg |

0768226240

மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-3390)

**A/L 2019, A/L 2020 வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான குழு மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள்**

(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்)

தவணைப் பரீட்சையில் குறைந்த புள்ளிகளா... கவலையை விடுங்கள். அடுத்த தவணையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளலாம். (பொருளியல், கணக்கீடு, வணிகக்கல்வி) யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்

தொடர்புகளுக்கு:- 0778448535,0765655956

(4988)

O/L உடன் 6 மாதத்தில் வீட்டுக்கு எந்தச் செலவும் இல்லாமல் விரும்பிய நாடு செல்லும் செல்லும் ஏற்பாட்டுடன்

# ஹொட்டேல் பயிற்சி



புதிய பிரிவு ஆரம்பம்! ஓகஸ்ட் 7 செவ்.

டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில் **வேலைவாய்ப்புடன் விசா**

26 ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா ஏற்பாட்டுடன் வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கனடா விசா

வேலைவாய்ப்பு விசாக்கள், ஏற்கனவே விசா வென்றவர்களின் விபரங்களை நேரில் பார்வையிட்டு விண்ணப்பம் செய்யலாம்!

SIKARAM ACADEMY

FAST TRACK to CAREERS

www.sikaram.lk

0777 324 004

021 221 9221

SIKARAM ACADEMY

221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்

(C-3404)

# மாபெரும் இசைநிகழ்ச்சி



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.

Rs.300/=, Rs.500/=, Rs.1000/= மற்றும் VIP ரிக்கட்டுக்கள்.

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)

(C-3395)

# Ahtus

**Ahtus Enterprises (Pvt) Ltd**

ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்

குழந்தைகள் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.



FARLIN

உலகின் அதி சிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள்

இல.30, கன்னாதிட்டி றோட், (வன்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.

Tel : 077 742 7322

(C-3411)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.